2022

வருடாந்த அறிக்கை



BOI
SRI LANKA

இலங்கை முதலீட்டுச் சபை



உள்ளடக்கம்

தலைவரின் செய்தி 01

பணிப்பாளர் நாயகத்தின் செய்தி 02

பணிப்பாளர்கள் சபை 03

இமுச பற்றி 04

நோக்கு, பணி மற்றும் முக்கிய விழுமியங்கள் 05

மைல் கற்கள் 06

ஒரே பார்வையில் இமுச இன் பொருளாதாரத்திற்கான பங்களிப்பு 07

2022 இல் இமுச இன் செயலாற்றுகை 09

வெநேமு க்கு ஒரு கவர்ச்சியான இடமாக இலங்கையை மேம்படுத்தல் 12

விசேஷ திறமைக்கான விருது 13

முக்கிய நிகழ்வுகள் 14

முதலீட்டாளர்களுடனான அலுவல்கள் 16

எங்களுடைய முதலீட்டாளர்களிடமிருந்து அறிந்துகொள்வது 17

சர்வதேச பங்குதாரர்களுடன் வேலை செய்தல் 19

பணியாளர்களின் ஈடுபாடு 20

வலயங்களின் அபிவிருத்தி 21

உலக முதலீடுகளின் போக்கு 2022 - 2023 22

முன்னோக்கிய பாதை 24

மனித மூலதனம் 25

சமூக தாக்கம் 27

நிதிசார் மீளாய்வு - 2022 28

நிதிசார் கூற்றுக்கள் 30

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2022 72

கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கைக்கான இமுச இன் பதில் - 2022 82

கணக்காய்வுக் குழுவின் அறிக்கை 91

இமுச இன் முக்கிய தொடர்புகள் 92



தலைவரின் செய்தி

“இலங்கை முதலீட்டுச் சபை, முதலீட்டை ஊக்குவிப்பதற்கான கேந்திர புள்ளி”

1978 இல் ஆரம்பிக்கப்பட்டது முதல் இலங்கை முதலீட்டுச் சபை இலங்கையின் பொருளாதாரத்தைத் திசை திருப்புவதிலும், வடிவமைப்பதிலும் முக்கிய பங்களிப்பவராக இருந்து வருகின்றது. ஆசியாவிற்குள் முதலாவது முதலீட்டு ஊக்குவிப்பு முகவராக இருப்பதுடன், தொழில்வாய்ப்பையும், ஏற்றுமதி வருவாயையும் ஏற்படுத்தி, வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் கவருவதில் இமுச முன்னோடியாகத் திகழ்ந்தது.

மீளாய்வுக்கான ஆண்டில் நாங்கள் விமரிசனத்துடனான பொருளாதார மாற்றம் மற்றும் வெளிநாட்டு நேரடி முதலீடாக (வெநேமு கள்) ஐஅடொ 3 பிலியனை ஈட்டுவது என்ற இலக்குகளைக் கொண்ட அதன் பிந்திய ஐந்து ஆண்டு கூட்டாண்மை மூலோபாயத்துடனான ஒரு கூட்டாண்மைத் திட்டத்துடன் எங்களுடைய மூலோபாய வழிகாட்டலை விருத்தி செய்கிறோம்.

விசேஷமாக கைத்தொழில் 4.0 என்ற புதிய தொழில்நுட்ப போக்கின் வருகையுடன் வெநேமு ஐ ஈட்டுவதற்கும், வியாபார வினைத்திறனை அதிகரிக்கவும் இமுச எண்மின்னுக்குச் (digital) செல்கிறது. எளிதாக வியாபாரம் செய்வதற்கான முன்னுரிமையை வழங்கி, உகந்த வணிகவெற்றியை அறுவடை செய்வதற்கான புதிய அணுகுமுறை இதற்குத் தேவைப்பட்டது. இமுச இன் கீழ் பதிவு செய்யப்பட்ட எந்தவொரு தொழில்முயற்சியும் நேரடியாக இமுச அலுவலகத்திற்கு வராது மின்னணுவியல் மூலம் சம்பந்தப்பட்ட ஆவணங்களைச் சமர்ப்பிப்பதற்காக இமுச கடதாசியற்ற ஆவண மேடை ஒன்றை அமைத்துள்ளது. இந்த முறைமையின் ஒரே நோக்கம் செயல்முறைகளும், நடைமுறைகளும் எளிமைப்படுத்தப்பட்டு, நெறிப்படுத்தப்பட்டு எங்களுடைய பெறுமதிமிக்க தொழில்முயற்சிகளுக்கு துரித சேவையை வழங்குவதாகும்.

முதலீட்டு ஒப்புதல் செயற்பாட்டை நெறிப்படுத்தி, நிறுவனங்களுக்கு இடையேயான ஒருங்கிணைப்பைப் பலப்படுத்தும் அதேவேளை, முதலீட்டாளர்களுக்கு வினைத்திறன் மிக்க சேவையை வழங்கும்பொருட்டு இமுச உலக வர்த்தக மையத்தின் (உவமை) மேற்கு கோபுரத்தின் 27வது மாடியில் ஒரு பிரத்தியேகமான இடத்தை ஒதுக்கி, முதலீட்டாளர்களுக்கு வசதியளிக்கும் நிலையத்தை (முவநி) நிறுவியுள்ளது.

கணிசமானதும் நன்மையளிப்பதுமான முதலீட்டு திட்டங்களைக் கவர்ந்து, அவர்களுக்கு வசதியளிக்கும் இமுச யின் சாதனை, மீளாய்வுக்கான ஆண்டில் இரண்டு சர்வதேச விருதுகள் வழங்கப்பட்டு. சர்வதேச சகாக்களால் நன்கு அங்கீகரிக்கப்பட்டுள்ளன. வருடாந்த முதலீட்டு கூட்ட (வமுகூ) விருதுகள் 2022 இன்போது தெற்கு, கிழக்கு ஆசியா மற்றும் ஓசானியா பிராந்தியத்தில் இமுச இரண்டாவது சிறந்த செயலாற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு முகவருக்கான வெள்ளி விருதை வென்றுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கை முதலீட்டுச் சபையின் (இமுச) அதிகார வரம்புக்குட்பட்டு செயற்படும் இலங்கையின் மிகப்பெரிய கட்டுநாயக்க ஏற்றுமதி செயலாக்க வலயம் (ஏசெவ) அதனுடைய முதலீட்டு மூலோபாயத்திற்காக வருடாந்த சுதந்திர வலய 2022 ஆம் ஆண்டிற்கான தரவரிசையில் சிறப்பு கௌரவமான குறிப்பைப் பெற்று, பிராந்தியத்தில் ஒரு முன்னணி கைத்தொழில் மற்றும் சுதந்திர வலயங்களில் அதன் நிலையை வலுப்படுத்தியுள்ளது. இந்த விருது பினான்ஷியல் ரைம்ஸ் (Financial Times) குழுவினால் ஒரு வெளிநாட்டு நேரடி முதலீட்டு சேவையான, ஐஇ(UK) இல் அமைந்துள்ள வெநேமு உளவுத் துறையினால் வழங்கப்பட்டது.

எங்களுடைய இமுச குடும்பத்திலுள்ள அனைத்து அனுபவங்களும் அதன் உறுப்பினர்களைச் சுற்றியே உருவாகின்றன. கொடுக்கப்பட்ட இந்த ஆண்டில் குறிப்பிடத்தக்க நிகழ்வு நடந்துள்ளது. இமுச இன் வரலாற்றில் அதிக எண்ணிக்கையிலான ஊழியர்கள் ஓய்வு பெறுகின்றனர். இது நன்றி செலுத்தவேண்டிய நேரமாகும். ஆகவே இந்த மிகவும் விசேஷமான வருடாந்த அறிக்கை வரலாற்று சாதனையைக் கொண்டுள்ளது. பல தசாப்தங்களாக இமுச ஐப் பறைசாற்றி, பிரிந்துசெல்லும் அனைத்து எங்களுடைய மிகவும் சிரேஷ்ட தோழர்களுக்கு எங்களுடைய மனமார்ந்த நன்றிகள். எங்களுடைய இதயமும், ஆத்மாக்களும் உங்களுக்கு களிப்பும், சந்தோஷமும் நிறைந்த அற்புதமான ஓய்வுநாட்களாக இருக்கவேண்டுமென வாழ்த்துவதில் உங்களோடு இணைந்திருக்கிறோம்.

இறுதியாக இது எங்களுடைய மனித மூலதனம் பற்றியதாகும். எமது நிறுவனத்தின் மனித மூலதனத்தின் மிக முக்கியமான காரணியின் திறமையை மேம்படுத்துவது மற்றும் மீள் திறனைப் பெறுவது என்பன ஏற்கெனவே வரிசையாக உள்ளது. எண்மின் பொருளாதாரத்தில் எண்மின் வெநேமு ஐ எங்கு ஈர்க்கவேண்டுமோ, அங்கு தற்போதைய மற்றும் எதிர்கால சுற்றுச் சூழல் அமைப்புக்குத் தக்கவாறு வாடிக்கையாளர் அனுபவத்தை எண்மின் மாற்றத்திற்கு இயக்கக் கூடியவாறு பணியாற்றுவதற்கான திறமை எங்களுடைய மக்களுடையதே.

பொறி. ராஜா எதிரிசூரிய

தலைவர்
இலங்கை முதலீட்டுச் சபை



பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

“இமுச, அமுல்படுத்தப்பட்ட சகல ஆக்கபூர்வமான பூர்வாங்க வேலைகளுடனும் முதலீட்டாளர்களுக்கான ஒரு சாதகமான சூழலை உருவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்துள்ளது”

இலங்கை முதலீட்டுச் சபையின் (இமுச) 2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். கடந்த இந்த ஆண்டானது உலகளாவிய பொருளாதார மந்தநிலைக்கு முந்திய தொற்றுநோய் மற்றும் அதன் விளைவாக நிச்சயமற்ற முதலீட்டுக் காலநிலைக்கு மத்தியில் வெளிப்படும் அரசியல் நெருக்கடி மற்றும் வர்த்தக பதட்டங்களின் தாக்கத்தினால் எதிர்பாராத சவால்களை எதிர்கொண்டது.

இந்தக் கஷ்டங்களுக்கும், சவால்களுக்கும் மத்தியில் வெளிநாட்டு நேரடி முதலீட்டைக் (வெநேமு) கவருவதற்கு இலங்கை நியாயமான பங்கை எதிர்கொண்டது. எவ்வாறாயினும் 2022 இல் மேலும் சாதகமான முதலீட்டு சூழலை ஏற்படுத்துவதற்கு இமுச இனால் மேற்கொள்ளப்பட்ட ஆக்கபூர்வமான முன் முயற்சிகளைத் தெரிவிப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். 2022 ஆம் ஆண்டில் உலகளாவிய பொருளாதார வீழ்ச்சி என்ற அதே நெருக்கடியான சூழ்நிலைக்கு இலங்கையும் முகங் கொடுத்துள்ளதுடன், அது வெநேமு கவர்ச்சிக்கான சவாலான சூழலையும் உருவாக்கியுள்ளது. முதலீட்டாளர்களுக்கு வசதியளிக்கும் நிலையம் (முவநி) ஸ்தாபித்தல், இமுச இன் தொழிற்பாடுகளை எண்மின் மயப்படுத்துதல், மீள் முதலீடுகளை ஊக்குவித்தல், கூட்டு கண்டுபிடிப்பாளர் தரவுத் தளத்தின் அறிமுகம் மற்றும் ஐந்து வருட வதிவிட விசா நிகழ்ச்சி என்பவற்றின் மூலம் இமுச தடையற்ற சேவைகளை உறுதி செய்ததுடன், ஏற்கெனவே உள்ள தொழில் முயற்சிகள் இந்தக் கொந்தளிப்பான காலகட்டத்தில் பொருளாதார சவால்களைத் தாண்டுவதற்கும் ஆதரவளித்தது.

2030 ஐநா (UN) நிகழ்ச்சி நிரலில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு ஏற்ப எங்களுடைய அர்ப்பணிப்பாக இமுச ஆனது இந்த ஆண்டு அதன் மூலோபாய திட்டவரம்பு 2022 - 2026 ஐ ஆரம்பித்து வைத்தது. இந்த மூலோபாய அணுகுமுறை உயர் மட்டங்களிலான தரத்தையும், நிலையான வெநேமு ஐக் கவர்வதையும் இலக்காகக் கொண்டுள்ளது. இது வேலைவாய்ப்புகளை உருவாக்குதல், ஏற்றுமதி வருவாய் அதிகரித்தல், மற்றும் உட்கட்டமைப்பு அபிவிருத்தி என்பனவற்றை உருவாக்குவதன் மூலம் அரசாங்கத்தின் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுக்கு குறிப்பிடத்தக்க அளவு பங்களிக்கும்.

முதலீட்டு வசதியளித்தல் ஒட்டுமொத்த முதலீட்டு கொள்கையின் கீழ் ஒரு முக்கிய தூண்டதலாக இனங் காணப்பட்டுள்ளதுடன், இமுச ஆனது அதன் ஆரம்ப விசாரணை முதல் அவர்களுடைய திட்டங்களின் காலம் முழுவதும் முதலீட்டாளர்களுடன் ஈடுபட்டு வருகிறது. பேரண்ட சவால்கள் இருந்தபோதும், 2022 ஆம் ஆண்டு வெளிநாட்டு நேரடிமுதலீடு (வெநேமு) உட்பாய்ச்சல் ஐஅடொ 1பிலி. இலக்கினைத் தாண்டி, 2021 ஆம் ஆண்டுடன் ஒபபிடும் போது 38% அதிகரித்து, ஐஅடொ 1.076 பிலி. தொகையை அடைந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். அத்துடன் இமுச இன் தொழில் முயற்சிகளின் வணிகப் பொருட்களின் ஏற்றுமதிகள் 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2022 இல் 8% இனாலும், 2019 இல் தொற்றுநோய்க்கு முன்னரான மட்டத்துடன் ஒப்பிடும்போது 2022 இல் 10% இனாலும் வளர்ந்துள்ளது. இதுதவிர 2022இல் இமுச நாட்டின் கைத்தொழில் ஏற்றுமதிக்கு 80% பங்களிப்புச் செய்து முக்கிய பங்குவகித்தது.

எங்களுடைய முயற்சிகள் சர்வதேசரீதியாக அடையாளம் காணப்பட்டுள்ளது என்பதைத் தெரிவிப்பதில் நான் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன். வருடாந்த முதலீட்டு கூட்ட (வமுகூ) விருதுகள் 2022 இன் போது தெற்கு, கிழக்கு ஆசியா மற்றும் ஓசானியா பிராந்தியத்தில் இமுச ஆனது இரண்டாவது சிறந்த செயலாற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு முகவருக்கான வெள்ளி விருதை வென்றுள்ளது. அத்துடன் இமுச இன் மிகப்பெரிய கட்டுநாயக்க ஏற்றுமதி செயலாக்க வலயம் (ஏசெவ) அதனுடைய மீள்முதலீட்டு மூலோபாயத்திற்காக வெநேமு உளவுத்துறை சுதந்திரவலய 2022 ஆம் ஆண்டிற்கான விருதுகளின்போது தரவரிசையில் சிறப்பு கௌரவமான குறிப்பைப் பெற்றுக்கொண்டது.

எங்களுடைய உள்ளூர் மற்றும் சர்வதேச முதலீட்டாளர்களின் விலைமதிப்பற்ற ஆதரவின்றி, எங்களுடைய சாதனைகள் எதுவும் சாத்தியமாகாது. இலங்கையின் திறனில் அவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைக்கு நான் எனது நன்றியை அவர்களுக்குத் தெரிவிக்கிறேன். அமைச்சுகள், மற்றும் அரச நிறுவனங்களுக்கும் அவர்களின் தொடர்ச்சியான ஒத்துழைப்பிற்கும், முதலீட்டு திட்டங்களுக்கு வசதியளிப்பதன் மூலம் வழங்கிய ஆதரவுக்கும் நான் எனது பாராட்டுக்களைத் தெரிவிக்கிறேன். அத்துடன் அர்ப்பணிப்புடன் செயற்பட்ட முதலீட்டு சபையின் எங்களுடைய குழாமிற்கும் நான் நன்றிகளைத் தெரிவிக்கிறேன். அவர்களுடைய ஆர்வம் மற்றும் தொழில்முறை எங்களுடைய வெற்றியை உந்துகிறது.

முன்னோக்கிப் பார்க்கும்போது இலங்கையில் ஒரு செழிப்பான முதலீட்டு வனப்பை உருவாக்குவது என்ற பணியில் இமுச உறுதியாக உள்ளது. உயர் மட்ட வெநேமு ஐக் கவர்ந்து. பொருளாதார வளர்ச்சியைத் தூண்டி, எங்களுடைய தேசத்திற்கு நிலையான எதிர்காலத்தைக் கட்டியெழுப்புவதற்கு மேலும் முயற்சிகள் மற்றும் சீர்திருத்தங்களை செயற்படுத்த நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்.

ரேணுகா எம் வீரக்கோன்

பணிப்பாளர் நாயகம்
இலங்கை முதலீட்டுச் சபை

பணிப்பாளர்கள் சபை



பொறி. ராஜா எதிரிசூரிய
தலைவர்
இலங்கை முதலீட்டுச் சபை

டாக்டர் லோரன்ஸ் பெரேரா
தலைவர்/பிநிஅ - மாக்ரோ ஹோல்டிங்ஸ் (தனி) லிமிடட்



டாக்டர் லோரன்ஸ் பெரேரா மைக்ரோ ஹோல்டிங்ஸ் (தனி) லிமிடட், ட்ரான்ஸ்மெக் குரூப் ஒப் கம்பனீஸ் மற்றும் மைக்ரோ கார்ஸ் லிமிடட் என்பவற்றின் தாபகர் ஆவார். தற்போது அவர் மைக்ரோ ஹோல்டிங்ஸ் (தனி) லிமிடட் மற்றும் மைக்ரோ கார்ஸ், ட்ரான்ஸ்மெக் என்ஜினியரிங் லிமிடட், ட்ரான்ஸ்மெக் இன்ர்நஷனல் லிமிடட், மைக்ரோ கார்ஸ் இன்ர்நஷனல் கொன்சோர்டியம், யூரோ ஸ்போட்ஸ் ஓட்டோ லங்கா (தனி) லிமிடட் மற்றும் சப்பலெற்றிவ் ப்ரொபட்டீஸ் (தனி) லிமிடட் என்பவற்றின் தலைவர்/பிநிஅ ஆகச் சேவையாற்றுகிறார். அவர் வாகன பொறியியல் கைத்தொழிலில் (Automobile Engineering Industry) உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் 44 வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்ட துறைசார் வாகன (Automobile) பொறியியலாளர் ஆவார். அவர் உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் ஓட்டோமொமைல் பரன்சைஸ்களில் (Automobile franchises) கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளை வகித்ததுடன் பீமர்டபிள்யூ (BMW), வொக்ஸ்வகன் ஜேர்மனி மற்றும் போ்ஜோ பிரான்ஸ் என்பவற்றில் விரிவான பயிற்சி பெற்றவர்.

டாக்டர் பெரேரா, குளோபல் போர்ச்சூன் 500 கொம்பனிகள்,2017 இல் சீனாவில் மேர்சிடீஸ் பென்ஸ் அசெம்பிளர்ஸ் ஜீலி மோட்டோர்ஸ் அன்ட் பெய்ஜிங் ஓட்டோமொற்றிவ் இன்டஸ்றி ஹோல்டிங் கம்பனி லிமிடட் (BAIC) என்ற 2 முன்னணி கம்பனிகளில் வாகனங்களைப் பொருத்திய முதலாவது இலங்கையரும் ஆவார். 2014 இல் ஓட்டோமேற்றட் ஓட்டோமொபைல் அசெம்பிளி ஒப்பரேஷனை இலங்கையில் முதலில் ஆரம்பித்தவர் அவராவார்.

டாக்டர் பெரேரா தனது பாடசாலைக் கல்வியை கொழும்பு, புனித பீற்றர்ஸ் கல்லூரியில் ஆரம்பித்து, கண்டி புனித அந்தோனியார் கல்லூரியில் 1974 ஆம் ஆண்டு முடித்துக்கொண்டார். இலங்கையிலும் மற்றும் வெளிநாடுகளிலும் ஓட்டோமோபைல் கைத்தொழிலுக்கு அவர் ஆற்றிய பாரிய பங்களிப்பிற்காக 1997 ஆம் ஆண்டு டாக்டர் பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டார். 2007 இல் தேசமானிய, தேசகீர்த்தி, மற்றும் ஜனரன்ஜன என்ற கௌரவ பட்டங்கள் அவருக்கு வழங்கப்பட்டன.

திரு. குஷான் டீ அல்விஸ், ஐச
சட்டத்தரணி



திரு குஷான் டீ அல்விஸ் 1985 ஆம் ஆண்டு சட்டத்தரணியாக சட்ட மன்றத்திற்குள் அழைக்கப்பட்டார். அவர் 36 வருடங்களுக்கு மேலாக சட்டத்தரணியாகக் கடமையாற்றி வருகிறார். அவர் நடுவர் மன்றம், கூட்டாண்மை சட்ட விடயங்களில் ஆலோசனை வழங்கல், ஒழுங்குமுறை கட்டமைப்புகள், இணக்க தேவைகள், மற்றும் சட்ட பூர்வ அக்கறை போன்ற மாற்று தகராறு தீர்க்கும் வழிமுறைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறார். தற்போது அவர் இலங்கை தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவலகத்தின் (ONUR) தலைவராக சேவையாற்றி வருகிறார். கொழும்பு பங்குச் சந்தையின் பட்டியலிடப்பட்ட கம்பனிகளின் (Listed Companies) பணிப்பாளர்கள் சபையில் அங்கத்தவராகவும் இருக்கிறார்.

திரு அல்விஸ் 2011 முதல் 2015 வரை இலங்கை சட்ட ஆணையத்தில் அங்கத்தவராக இருந்தார். வரி மேல்முறையீட்டு ஆணையத்தின் சட்ட ஆலோசகர் குழுவில் ஒரு அங்கத்தவராகவும் இருந்தார். அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கான பொது பிரதிநிதித்துவக் குழுவில் ஓர் அங்கத்தவராகவும் சேவையாற்றி உள்ளார். அவர் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் உப தலைவராகவும் சேவையாற்றி உள்ளார்.

திரு அத்துல ஹப்புதான்றி
முகாமைத்துவ பணிப்பாளர், தான்றி ட்ரெயிலேர்ஸ் (தனி) லிமிடட்



திரு அத்துல ஹப்புதான்றி, தான்றி ட்ரெயிலேர்ஸ் (தனி) லிமிடட், தான்றி ட்ரெயிலேர் அன்ட் இகியூப்மென்ற் (தனி) லிமிடட் மற்றும் ரெக்கோ லங்கா (தனி) லிமிடட்டின் முகாமைத்துவ பணிப்பாளர் ஆவார். அவர் க்ராண்ட் உடவலவ சபாரி றிசோட் (safari resort) பணிப்பாளராகவும் சேவையாற்றுகிறார். அவர் தன்னுடைய தொழிலை வோக்கர்ஸ் சன்ஸ் லிமிடட்டில் (றுயடமநசள ளுழஎளெடுவன.) ஒரு கடல் பொறியியல் பயிலுனராக (Marine Engineering Trainee) ஆரம்பித்தார். ஹப்புதான்ற்றி எம்என்எஸ்எல் ஷிப்ஸ் (MNSLShips) இல் கனிஷ்ட பொறியிலாளர்,5 வது, 4 வது, 3 வது பொறியிலாளராக 3 வருடங்கள் சேவையாற்றியுள்ளார். கடல் பொறியிலாளர் சங்கத்தின் (Marine engineers Society) பொருளாளர்-தலைவராகவும், ட்ரக் அன்ட் ரெயிலர் மனுபக்வரர்ஸ் அசோசியேஷன் (Truck and Trailer Manufacturers Association) தலைவராகவும், தொழில்சார் சங்கங்களின் அமைப்பின் (Organization of Professional Associations) முன்னாள் குழு அங்கத்தவராகவும், கைத்தொழில் அபிவிருத்தி மன்றத்தின் தலைவராகவும், தென் மாகாண கைத்தொழில் குழுவின் குழு அங்கத்தவராகவும், கைஅச (IDB) குழு அங்கத்தவராகவும் பதவிகள் வகித்துள்ளார்.

அவர் போக்குவரத்து திணைக்களத்தில் அபாயகரமான பெற்றோலியம் சரக்குகளைக் கையாளக்கூடியவர் என்ற சிறப்பு ஒப்புதலுடன் தகுதியுள்ள கடல் பொறியியலாளர் தரம் 1 ஐப் பெற்றுள்ளார்.

திரு ஜயமின் பெல்பொல
சிரேஷ்ட நிதி ஆலோசகர்



திரு ஜயமின் பெல்பொலவிற்கு கொல்ட்மன் சச்சே (யூகே) (Goldman Sache (UK) மற்றும் ஐ.அ.நா. நோமுரா (Nomura) உட்பட சர்வதேச முதலீட்டு வங்கியியல் மற்றும் சொத்து முகாமைத்துவம் என்பவற்றில் 10 வருடங்களுக்கு மேலான அனுபவம் உள்ளது. அவர் வோல் ஸ்ரீர்ரில் (Wall Street) புதிதாக உண்டாக்கும் திறமைக்கும், அதி உயர் விளைவைக் கொடுக்கும் முதலீட்டு மூலோபாயத்திற்கும் அடையாளம் காணப்பட்ட ஒரு குழுவான கோல்ட்மன் சச்சியில் விரும்பத்தக்க பிரின்ஸ்பில் ஸ்ரரஜீஸ் (Principal Strategies) குழுவில் பணிபுரிந்த ஒரேயொரு இலங்கையருமாவார். திரு பெல்பொல அவருடைய தொழிலில் பல்வேறு துறைகளிலும், நாடுகளிலும் ஐஅடொ 20 பில்லியனுக்கும் கூடுதலான பெறுமதிவாய்ந்த சர்வதேச முதலீடுகளைக் கட்டமைத்து, முகாமைத்துவம் செய்துள்ளார்.

தற்போது அவர் ஜயாரு ட்ரேட் பாட்னர்ஸின் (Jayaru Trade Partners) தலைவராகவும், சிலோன் ஈகோ ஸ்பைசஸின் (Ceylon Eco Spices) சபை பணிப்பாளராகவும் சேவையாற்றுகிறார். ஜயாரு ட்ரேட் பாட்னர்ஸ் உலகளாவிய வணிகப்பொருட்கள் சந்தைக்கு உட்கட்டமைப்பு, நிதியியல் மற்றும் செயற்பாட்டு சேவைகளை வழங்குகிறது.

தொழில்நுட்பத்தையும், தரவு அறிவினையும் நிதிசார் துறையில் பிரயோகிப்பதில் ஆசியாவில் ஒரு மிகச் சிறந்த நிதிசார் தொழில்நுட்ப தொடக்கமாக அண்மையில் அடையாளம் காணப்பட்ட ஒரு கம்பனியான மணிவேக்ஸ் ரெக்னோலஜிர்ஸின் தாபக தலைவராகவும் ஜயமின் இருந்தார். திரு பெல்பொல ஒரு மூத்த ஆலோசகராக ஐஅ. வங்கிகள் மற்றும் சர்வதேச மத்திய வங்கிகளில் வங்கியியல் துறை மறுசீரமைப்புக்கு ஆலோசனையும் வழங்கியுள்ளார். விசேடமாக கட்டுப்பாட்டாளர்களுக்கும் அமெரிக்க வங்கியில் பணிப்பாளர் சபைக்கும், டீபிஎஸ் (DBS), வெல்ஸ் பார்கோ (wells Fargo) மற்றும் டொய்ச்ச வங்கி (Deutsche Bank) ஆகியவற்றிற்கும் போதுமான மூலதனம் பற்றிய தீர்மானங்கள், மறுமூலதனங்களாக்கல் வங்கியியலில் எண்மின் புதிய கண்டுபிடிப்புகளின் பிரயோகம் பற்றியும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

திரு பெல்பொல வணிக நிர்வாக முதுமானியில் (MBA) முதுமானிப் பட்டத்தை ஹவாட் பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றார். அவர் தனது பட்டயத்தை (Charter) ஐஅ சீஎஃஏ நிறுவனத்திலிருந்தும் (CFA Institute, USA), சீமா (ஐஇ) (CIMA (UK)) ஐயும் பெற்றுள்ளார். திரு பெல்பொல 20 வயதில் உலகில் மிகவும் இளைய வயதினரான சீமா (CIMA) முகாமைத்துவ கணக்காளராவார். அந் நாட்களில் சீமா (CIMA) பரிசை வென்ற இளவயதினர் இவராவார். அவர் சிம் (யூகே) (CIM (UK)) இலிருந்து பட்டப்படிப்புக்கு பின்னரான சந்தைப்படுத்தலில் டிப்ளோமாவையும் பெற்றிருந்தார்.

இமுச பற்றி

1978 இல் இணைக்கப்பட்ட இலங்கை முதலீட்டுச் சபை முதலீட்டு ஊக்குவிப்பு, தேசிய பொருளாதாரத்தை விரிவுபடுத்தல் மற்றும் வலுப்படுத்தலுக்கு ஒரு கேந்திர புள்ளியாகத் தொழிற்படும் ஆணையுடன் நிறுவப்பட்டது. இந்த கேந்திர முகவரானது திறனான மற்றும் முக்கிய வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல், ஏற்றுமதியை ஏற்படுத்துதல் தொழில்நுட்பம் மற்றும் நாட்டின் திறன் பரிமாற்றத்தை மேம்படுத்துதல் என்பன மூலம் நிலைபேறான பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துகிறது.

இமுச முதலீட்டாளர்களுக்கு அவர்களின் பயணம் முழுவதும் அதன் திறமையை வெளிப்படுத்தி, சுறுசுறுப்பு மற்றும் நோக்கத்துடன் பணிபுரிந்து, அதன் நோக்கங்களையும் இலக்குகளையும் அடைவதற்கு ஏற்கெனவே உள்ள முதலீட்டாளர்களுக்கிடையே எப்பொழுதும் நம்பிக்கையைக் கட்டியெழுப்பும் வகையில் ஆதரவு அளிக்கிறது. கேந்திர முகவரானது கைத்தொழில்துறை மற்றும் தொழில்முயற்சி அபிவிருத்தியை ஊக்குவித்து மேம்படுத்தும் அதே வேளை பன்முகப் படுத்தலையும் வெளிநாட்டு அந்நிய செலாவணி வருவாய் அதிகரிப்பையும் உறுதிப் படுத்துகிறது. சாத்தியமான வெளிப்புற அதிர்ச்சிகள் இருந்தபோதிலும், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் ஏனைய பல முன்முயற்சிகளுடன் ஒருங்கிணைக்கப்பட்ட இமுச இன் தக்கவைப்பு திறன்கள், சகாக்கள் மத்தியில் அதன் சர்வதேச போட்டித்திறன்களை மேம்படுத்தியுள்ளது.

தேசிய முதலீட்டு ஊக்குவிப்பு முகவராக இமுச இன் பங்கு:

- முன்னுரிமை துறைகளை இலக்குவைத்து முதலீடுகளைக் கவர்வதற்காக, அரசாங்கத்தின் முதலீட்டு கொள்கைகளை அமுல்படுத்துவதற்கு உதவிசெய்து, வெநேமு இன் மட்டத்தைப் படிப்படியாக அதிகரிக்கச் செய்து, தேசிய வளர்ச்சி இலக்கினை அடைவதற்குப் பங்களித்தல்.

- இலங்கையில் உயர் பெறுமதி சேர்/உயர் தொழில்நுட்ப உற்பத்தி, உயர் பெறுமதிசேர் ஆடை, த.தொ.(ா) செயல்படுத்தப்பட்ட சேவைகள், சுற்றுலாத்துறை, உணவு பதனிடுதல், ஏற்பாட்டியல், கல்வி மற்றும் பாரிய அளவிலான உட்கட்டமைப்பு அல்லது ஏனைய தெரிவுசெய்யப்பட்ட துறைகளில் கருத் திட்டங்களை ஆரம்பிக்க உத்தேசிக்கும் முதலீட்டாளர்கள் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் முதலாவது புள்ளியாக இமுச தொழிற்படுகிறது. முதலீட்டாளர்களுக்கு வசதிகளை வழங்குவதற்காக தகவலும், வழிகாட்டுதலும் வழங்கப்படுவதுடன், ஏனைய நிரல் நிறுவனங்களிடமிருந்து வேண்டப்படும் ஒப்புதல்களும் இமுச இனால் ஒருங்கிணைக்கப் படுகிறது.

- கருத்திட்ட முன்மொழிவுகளை அங்கீகரிப்பதற்காக அந்தந்தத் துறை முதலீட்டு விண்ணப்பங்கள் இமுச இனால் மதிப்பீடு செய்யப்பட்டு, சலுகைகள் வழங்கி, புலம் பெயர்ந்தவர்களுக்கு விசா வழங்குவது எளிதாக்கப் படுகிறது.

- இமுச ஆனது, மூலதனப் பொருட்கள் மற்றும் மூலப் பொருட்களின் இறக்குமதிக்கான அனுமதி மற்றும் முடிவுப் பொருட்களின் ஏற்றுமதி என்பவற்றிற்கு வசதியளித்து, கவனிப்பதன் மூலம் முதலீட்டாளர்களுக்கு கருத்திட்ட காலச் சக்கரம் முழுவதும், கருத்திட்டம் ஆரம்பமானது முதல் அமுல்படுத்தி, அதன் வெற்றிகரமான செயற்பாட்டிற்கு ஆதரவு அளிக்கிறது.

- இமுச குறைந்தளவு காலப் பகுதிக்குள் கருத்திட்டங்களை அமுல் படுத்துவதற்காக முதலீட்டாளர்களுக்குப் பொருத்தமான தளங்களில் உடனடியாகக் கிடைக்கக்கூடியவாறு வழங்குவதற்காக உட்கட்டமைப்பு வசதிகளுடன் ஏற்றுமதி செயலாக்க வலயங்களை அபிவிருத்தி செய்து வருகிறது.

“இமுச ஆனது முதலீட்டாளர்களுக்கு கருத்திட்டத்தின் காலச் சக்கரம் முழுவதும், கருத்திட்டம் ஆரம்பமானது முதல் அமுல்படுத்தி, அதன் வெற்றிகரமான செயற்பாட்டிற்கு ஆதரவு அளிக்கின்றது”



நோக்கு

“ஆசியாவின் நிலையான முதலீடுகளுக்காக அதிசிறந்த கவர்ச்சிமிக்க கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைத்தல்”

பணி

“இலங்கைக்கு தரமான முதலீட்டினைக் கவர்ந்தீர்ப்பதற்கும், அதனைத் தக்க வைப்பதற்கும் உள்ள சாத்திய தன்மையை நிறைவேற்றுவதற்காக மேம்படுத்தப்பட்ட ஏற்றுமதி அடிப்படையொன்றுக்கு இட்டுச் செல்வதற்கும், மிகச்சிறந்த தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும், புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் புத்தாக்கம் என்பவற்றினூடாக அறிவையும், திறன்களையும் மேம்படுத்துவதற்கும், இலங்கை முதலீட்டுச் சபை நேர்மறையாகவும், வேகமாகவும் செயலற்றுகின்றது”.

முக்கிய விழுமியங்கள்

செயல்திறன் மற்றும் சாதனைக்கான ஆர்வம்:

இமுச ஆனது மேன்மையடைய விரும்புகின்றதான ஆனால் யதார்த்தமான முதலீடு மற்றும் வேலைவாய்ப்புகளை உருவாக்குகின்ற இலக்குகளை அடையும்.

பொது மற்றும் தனியார் கோளங்களைக் கட்டுப்படுத்துதல்:

எங்களுடைய பொருளாதாரத்தை செழிப்படையச் செய்வதற்கு உதவும் முதலீடுகளை எளிதாக்கி, பாதுகாத்து வளர்ப்பதில் இமுச பெருமை கொள்ளும். நாங்கள் பொது மற்றும் தனியார் நிறுவனங்களுடன் ஒத்துழைத்து, பங்குதாரராக அவர்களின் பணிக்குப் பங்களிப்பு செய்யும் அதேவேளை எங்களுடைய பணியையும் வழங்குவோம்.

ஒருமைப்பாடு மற்றும் தொழில்முறை:

இமுச ஆனது முதலீட்டாளர்களின் தேவைகளைப் புரிந்துகொண்டு, சரியான நேரத்தில் வர்த்தக மற்றும் புதுமையான தீர்வுகளை வழங்குவதில் அர்ப்பணத்துடன் இருக்கும். நாங்கள் ஒருமைப்பாடு, நேர்மை, நாணயம், நம்பகத்தன்மை, நம்பிக்கை, நியாயமாக நடத்துதல், மரியாதை மற்றும் அக்கறை என்பவற்றை இதயபூர்வமாக அர்ப்பணிப்பில் கொண்டிருப்போம்.

உயர்ந்த வாடிக்கையாளர் சேவை:

போட்டியிடும் வெளிநாட்டு நேரடி முதலீட்டு இடங்களைவிட செயல்திறன் மிக்க மற்றும் கணிசமான முன்னேறும் நிலைகள்


மக்கள்:

திறன், ஒத்துழைப்பு, அர்ப்பணிப்பு மற்றும் அதன் மக்களின் சிறப்பிற்குப் பொறுப்பாக இருத்தல் என்பவற்றிற்கு இமுச மதிப்பளிக்கும். பதவியினர் பணியாற்றுவதற்கும், விருத்தி செய்துகொள்வதற்கும், வெற்றியடைவதற்கும் இமுச யை ஒரு சிறந்த இடமாக ஆக்குவதில் நாங்கள் தொடர்ந்து கவனம் செலுத்துவோம்.




“இமுச முதலீட்டாளர்களின் தேவைகளைப் புரிந்து கொள்வதற்கு அர்ப்பணித்துள்ளது”

மைல்கற்கள்


2022
வழமை விருதுகள் 2022 இல் வெள்ளி விருது வெற்றியாளர் வெநேமு உளவுத்துறை சுதந்திர வலய விருது 2022 முதலீட்டாளர்களுக்கு வசதியளிக்கும் நிலையம் ((முவநி (IFC))தாபித்தல் பங்குதாரரைக் கண்டுபிடிக்கும் மேடை ஆரம்பித்துவைத்தல் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நீண்ட கால வதிவிட விசா திட்டம்
2021
முதன் முதலாக இலங்கை முதலீட்டு மன்றம் 85 நாடுகளைச் சேர்ந்த 5,000 க்கும் மேற்பட்ட உள்ளூர் மற்றும், வெளிநாட்டு பங்குபற்றியோருக்கு மெய்நிகராக நடாத்தப்பட்டது.
2019
இமுச ஏற்றுமதி செயலாக்க வலயங்களுடன் பிங்கிரிய ஏசெவ: புதிதாகச் சேர்ந்துகொண்டது .
2020
ஏறாவூரிலும், அரபொக்கவிலுமாக (அம்பாந்தோட்டை) இரண்டு புதிய வலயங்களின் அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டது.
2018
இமுச இன் 40வது வருட கொண்டாட்டங்கள் அதிஉயர் வெ.நே.மு ஐ.அ.டொ.2.37 பிலி. அடையப் பெற்றது. பிஏசெவ மதிப்புமிக்க IR விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது
2014
இமுச "ஆசிய பசுபிக் வர்த்தக மன்றம் 2014" ல் பங்குதாரர் ஆகியது
2009
இமுச ISO 9001:2000 ஐப் பெற்ற முதலாவது அரச நிறுவனமாகியது. இமுச யாழ்ப்பாண அலுவலகம் நிறுவப்பட்டது.
2011
ஐ.அ.டொ.1 பிலி. வெ.நே.மு. இலக்கு எட்டப்பட்டது.
2013
"பொதுநலவாய அரச தலைவர்களின் கூட்டம் (CHOGM) 2013" இற்குச் சமாந்தரமாக நடைபெற்ற "பொதுநலவாயவர்த்தக மன்றத்தின்" முதலீட்டாளர் மன்றத்திற்கு இமுச தலைமை தாங்கியது.
2008
உவமை இன் ஒன்பது(09) தளங்களைக் கொள்வனவு செய்து, இமுச இன் தலைமையகம் உலக வர்த்தக மையத்தில் நிரந்தரமாக தாபிக்கப்பட்டது
2006
கைத்தொழில் துறையை கிராமப்புறத்திற்குக் கொண்டு-செல்லும் நோக்கத்துடன், "300 தொழில்முயற்சிகள் திட்டம்"என்பதன் முக்கிய இயக்கிகள் ஆரம்பிக்கப்பட்டன
1999
ஹொரண ஏ.செ.வ. உம், வத்துபிற்றிவல ஏசெவ உம் தாபித்தல்
2000
பொல்காவெல ஏ.செ.வ., மாவத்தகம ஏ.செ.வ. மற்றும் மிரிஜாவில ஏ.செ.வ. என்பன தாபித்தல்
2001
சீத்தாவக வலயம் இலங்கை முதலீட்டுச் சபையின் சீத்தாவக ஏசெவ ஆக கவிகரிக்கப்பட்டது
1998
மிரிகாம ஏசெவ மற்றும் மல்வத்த ஏசெபூ தாபித்தல்
1995
கண்டி கைத்தொழில் பூங்கா தாபித்தல்
1991
தென் மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்காக கொக்கல ஏற்றுமதிசெயலாக்க வலயம் தாபித்தல்
1992
1992 ஆம் ஆண்டின் சட்ட இல. 49இன் கீழ் இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) ஒரு நியதிச்சட்ட நிறுவனமாக இணைக்கப்பட்டது. இமுச கொபெபொஆ இன் வாரிசாகும். அரச பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வேலையில்லாமையைக் குறைப்பதற்காக "200 தைத்த ஆடைகள் கைத்தொழில் நிகழ்ச்சி" அறிமுகப்படுத்தப்பட்டது.
1990
வெளிநாட்டு முதலீட்டு ஆலோசனைக்குழு கொபெபொஆ என்பன ஒன்றாக இணைக்கப்பட்டு, கொபெபொஆ இலங்கையில் வெளிநாட்டு முதலீட்டை அங்கீகரிக்கும் ஏக அதிகார சபையாக ஆகியது.
1986
வலய தொழில்முயற்சிகளுக்கு உதவுவதற்காக கொபெபொஆ இனால் ஒரு தொழில் வங்கி அமைக்கப்பட்டது. 1986 இல் இமுச இன் இரண்டாவது வலயமாக, பியகம ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபித்தல்
1978
1978 ஆம் ஆண்டின் 04 ஆம் இலக்க பாராளுமன்ற சட்டத்தின் கீழ் கொழும்பு பெரும்பாக பொருளாதார ஆணைக்குழு (கொபெபொஆ) தாபிக்கப்பட்டது.
1979
1979 ஆம் ஆண்டு கட்டுநாயக்க ஏற்றுமதி செயலாக்க வலயம் தாபித்தல். இதுவே இன்றுவரை பராமரிக்கப்பட வேண்டியதும், முதலாவதும், பெரியதுமான வலயமாகும்.


ஒரு பார்வையில் இமுச இன் பொருளாதாரத்திற்கான பங்களிப்பு

வெநேமு உட்பாய்ச்சல் (1978 - 2022)




தொழில்முயற்சிகளின் ஏற்றுமதிகள்


இமுச ஏற்றுமதிகள் (வணிகம் மற்றும் சேவைகள்) - (1979 - 2022)



இமுச ஏற்றுமதிகள் எ தேசிய வாணிபப் பொருட்கள் ஏற்றுமதிகள் (2013 - 2022)




தேசிய துறைசார் ஏற்றுமதி செயல்திறன் மீதான இமுச இன் பங்களிப்பு



தேசிய மொத்த ஏற்றுமதிகளின் 66%

- தேசிய தைத்தஆடைகள் ஏற்றுமதிகளின் 99%
- தேசிய தோல், பயண பொருட்கள் மற்றும் காலணி ஏற்றுமதிகளின் 93%
- தேசிய றப்பர் ஏற்றுமதிகளின் 91%
- தேசிய இயந்திரங்கள், இயந்திர உபகரணங்கள் ஏற்றுமதிகளின் 83%




கைத்தொழில் மொத்த ஏற்றுமதிகளின் 80%

- தேசிய அச்சு தொழில் உற்பத்திகள் ஏற்றுமதிகளின் 88%
- தேசிய புடவை ஏற்றுமதிகளின் 81%
- தேசிய போக்குவரத்து உபகரண ஏற்றுமதிகளின் 81%


இமுச தொழில்முயற்சிகள் மற்றும் வலயங்களின் புவியியல் பரவல்



மாவட்டம்	திட்டங்களின் எண்ணிக்கை
1 கொழும்பு	452
2 கம்பஹா	381
3 களுத்துறை	111
4 புத்தளம்	71
5 காலி	62
6 குருணாகல்	62
7 நுவரெலியா	58
8 கண்டி	52
9 இரத்தினபுரி	39
10 கேகாலை	35
11 பதுளை	32
12 அம்பாந்தோட்டை	31
13 மாத்தளை	31
14 மாத்தறை	23
15 மட்டக்களப்பு	16
16 அனுராதபுரம்	14
17 திருகோணமலை	12
18 அம்பாறை	9
19 மொனராகல	8
20 பொலனறுவை	8
21 யாழ்ப்பாணம்	7
22 வவுனியா	5
23 கிளிநொச்சி	3
24 முல்லைத்தீவு	2
மொத்தம்	1,524




இமுச தொழில்முயற்சிகள் மூலம் வேலைவாய்ப்பு உருவாக்கம்



2022 இல் இமுச இன் செயலாற்றுகை

ஒரே பார்வையில் வருடம்





திட்ட செயலாற்றுகை 2022


வழங்கப்பட்ட முதலீட்டு ஒப்புதல்கள்

2022 ஆம் ஆண்டில் இமுச ஐஅடொ 1,82 பிலி. பெறுமதியிடப்பட்ட 160 முதலீட்டு திட்டங்களுக்கு (72 புதிய திட்டங்களுக்கும், 88 ஏற்கெனவே உள்ள விரிவாக்கல் திட்டங்களுக்கும்) ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஐஅடொ 1.82 பிலி
மொத்த ஒப்புதல் வழங்கப்பட்ட முதலீடுகள்

160
மொத்த திட்டங்கள்


25,430
வேலை வாய்ப்புகள




புதிய திட்டங்கள் - **72**
ஐஅடொ 1.37 பிலி (75%)

விரிவாக்கங்கள் - **88**
ஐஅடொ 0.45 பிலி (25%)

புதிய திட்டங்களின் எண்ணிக்கை




விரிவாக்கங்களின் எண்ணிக்கை




வெநேமு உட்பாய்ச்சல் 2022

2022 இல் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட வெநேமு ஐஅடொ 1,076 மிலி. ஆகும். 2022 இல் கிடைக்கப்பெற்ற மொத்த வெநேமு இல் உற்பத்தித் துறை அதி உயர்ந்த வெநேமு (34%) ஐப் பெற்றுள்ளதுடன், அதனைத் தொடர்ந்து, ஏனைய துறைகளுள் தொலைத்தொடர்பு (32%). ஆதன அபிவிருத்தி (18%), ஏனைய சேவைகள் (7%), சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு (5%), துறைமுக அபிவிருத்தி (3%), ததொ மற்றும் வெசெவே (1%) பெற்றுள்ளன.

வெநேமு உட்பாய்ச்சல் 2022 - துறைவாரியான பங்களிப்பு




வெநேமு உட்பாய்ச்சல் உள்ள முக்கிய நாடுகள் - 2022



2022 இல் உள்ளூர் முதலீடு

ஜன-டிஸ 2022 காலப்பகுதிக்குள் மேற்கொள்ளப்பட்ட மொத்த உள்ளூர் முதலீட்டுத் தொகை ஐஅடொ 629மிலி. (ரூபா 204,132 மிலி.) ஆகும். மேற்கொள்ளப்பட்ட மொத்த உள்ளூர் முதலீடுகளில் உற்பத்தித் துறை அதி கூடியளவு தொகையான முதலீட்டை (35%) பெற்றுக்கொண்டதைத் தொடர்ந்து, ஏனையவற்றுள் ஆதன அபிவிருத்தி (29%), தொலைத்தொடர்பு (11%), சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு (9%), துறைமுக அபிவிருத்தி (5%), ஏனைய சேவைகள் (6%), பெற்றுக்கொண்டன.






ஏற்றுமதிகள் 2022

2022 ஆம் ஆண்டில் இமுச தொழில்முயற்சிகளின் மொத்த ஏற்றுமதிகள் ஐஅடொ 9,428 மிலி. (ஐஅடொ 8703 மிலி வணிக ஏற்றுமதிகள் மற்றும் ஐஅடொ 725 மிலி. மதிப்பிடப்பட்ட சேவைகள் ஏற்றுமதி) எனப் பதிவுசெய்யப்பட்டது. இமுச இன் வணிப ஏற்றுமதி தேசிய வணிப ஏற்றுமதியின் 66% ஆகவும், தேசிய கைத்தொழில் ஏற்றுமதியின் 80% ஆகவும் கணக்கிடப்பட்டது.


இமுச இன் மொத்த ஏற்றுமதிகளில் 89% ஆனவை கைத்தொழில் ஏற்றுமதிகளிலிருந்தான அதேவேளை 3% ஆனவை விவசாய ஏற்றுமதிகளிலிருந்தெனப் பதிவுசெய்யப்பட்டது. இமுச தொழில் முயற்சிகளின் மொத்த ஏற்றுமதிகளில்சேவைகள் துறை 8% பங்களிப்பு செய்துள்ளது.

இமுச ஏற்றுமதி கூடை - 2022



இமுச இன் தொழில்முயற்சிகளின் மொத்த கைத்தொழில்துறை ஏற்றுமதிகளில் 69% தைத்த ஆடைகள் மற்றும் புடவைத் துறையிலிருந்தான அதேவேளை, 11% றப்பர் துறையிலிருந்தும், 6% இயந்திரம் மற்றும் இயந்திரவியல் உபகரணங்களிலிருந்தும், 2% உணவு மற்றும் பானங்கள் துறையிலிருந்துமாகும்.


இமுச கம்பனிகளின் கைத்தொழில்துறை ஏற்றுமதிகள் (ஐஅடொ மிலி.) – 2022



வேலைவாய்ப்பு

2022 இல் பதிவுசெய்யப்பட்ட வேலைவாய்ப்பு 505,844 ஆகும். மொத்த வேலைவாய்ப்பில், தைத்த ஆடைகள் மற்றும் தொடர்புபட்ட துறைகள் அதி கூடுதலான (62%) பங்களிப்பைச் செய்துள்ளதைத் தொடர்ந்து, மற்றைய துறைகளில் ஏனைய உற்பத்திப் பொருட்கள் (13%) ஐயும், தகவல் மற்றும் வெகுசெவை (5%) ஐயும், ஏனைய சேவைகள் (3%) ஐயும், ஆதன அபிவிருத்தி (3%) ஐயும், சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு (2%) ஐயும், தொலைத்தொடர்பு (2%)ஐயும் பங்களிப்புச் செய்துள்ளன.

துறைவாரியாக வேலைவாய்ப்பு





வெநேழு க்கு ஒரு கவர்ச்சியான இடமாக இலங்கையை மேம்படுத்தல்

வெநேழு க்கு கவர்ச்சியான இடம்

- **அலுவல்கள்**

8	வலைப்பக்கங்கள்
3	வசதியளிக்கும் நிகழ்ச்சிகள்
37	மெய்நிகர்/நேரில் கலந்துரையாடல்
8	இலங்கையிலுள்ள வெளிநாட்டு தூதரகங்களுடன் சந்திப்பு
15	பிரதிநிதிகள் குழு/வணிக மன்றங்கள்
121	கவனிக்கப்பட்ட விசாரணைகள்
15	கவனிக்கப்பட்ட முவமை (IFC) விசாரணைகள்

- **உண்டாக்கப்பட்ட மொத்த முன்னெடுப்புகள்** 1300

- **மொத்த நிகழ்நிலை அலுவல்கள்**

1007	பதிவுசெய்யப்பட்ட பங்குபற்றுவோர்
602	உண்மையாகப் பங்குபற்றியோரின் எண்ணிக்கை



ஊடக அலுவல்கள்

16,000+ followers	2,300+ followers	800+ followers

மொத்த சமூக ஊடகங்களைப் பின்பற்றுவோர் - 19,175

FOLLOW New followers in 2022 - 10,230

Impressions 328,954

Profile visits 100,729

நாங்கள் பதிவுசெய்தவை

- ஒப்பந்தங்கள் கைச்சாத்திடல்
- ஏற்றுமதிகள் சம்பந்தமாக இமுச தொழில்முயற்சிகளின் துறைவாரியான செயலாற்றுகை
- வலய மற்றும் தொழிற்சாலை விஜயங்களும், அந்தந்த செயற்பாடுகளும்
- சம்பவங்கள், மன்றங்கள் கொண்டாட்டங்களில் இமுச பங்குபற்றுதல்
- இமுச ஒப்புதல் வழங்கிய தொழிற்சாலைகள் திறப்பு விழாக்கள்
- நஅச (UDA) ஒப்புதல் வழங்கிய அபிவிருத்தி திட்டங்கள்
- தூதுவர்கள் உட்பட பிரபல்யமான நபர்களின் இமுச விஜயம்
- பங்குதாரர்களுடனான முக்கிய கூட்டங்கள்

இலங்கை முதலீட்டுச் சபை

வெளிநாட்டு நேரடி முதலீட்டை மேம்படுத்துவதற்கான இலங்கை அரசாங்கத்தின் கேந்திர முகவர்.
பயனர்பெயர் - @BOIsrilanka இலிருந்து @investin_SL க்கு மாற்றப்பட்டுள்ளது.

விசேட நிகழ்வுகள்

- நாளொன்றுக்கு இரண்டு ட்விட்கள் இடுதல்
- இமுச இணையத்தளத்தின் கீழ் ஒரு ட்விட்டர் காலவரிசையை உட்புகுத்தல்
- #InvestinSL பெயருடைய ஒரு புதிய ஹாஷ்ரக் (hashtag) அறிமுகப்படுத்தப்பட்டது
- வீடியோக்கள் அடங்கிய உள்ளடக்கத்தை ட்விட் செய்வதற்கு ஆரம்பிக்கப்பட்டது

விசேஷ திறமைக்கான விருது



வெள்ளி விருது

வமுகூ (AIM) விருது 2022 இல் வெள்ளி விருதை வென்றது

தெற்கு ஆசியாவில் முன்னணி முதலீட்டு ஊக்குவிப்பு முகவர்களுள் ஒன்றான இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) தென் கிழக்கு ஆசியாவிலும், ஓசானிக் பிரரந்தியத்திலும் முதலீட்டு ஊக்குவிப்பு முகவர்களுள் இரண்டாவது சிறந்த செயலாற்றுகைக்காக வெள்ளிப் பதக்கத்தை வருடாந்த முதலீட்டு கூட்ட (வமுகூ AIM)விருது 2022 இல் வென்றுள்ளது.

வமுகூ விருதுகள் கணிசமானதும், நன்மைபயக்குவதுமான முதலீட்டுத் திட்டங்களைக் கவர்வதுடன், ஒவ்வொரு நாட்டின் சாதனையையும், அந்தந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான அவற்றின் பங்களிப்பு என்பவற்றையும் கருத்திற் கொள்வதை இலக்காகக் கொண்டது.

வமுகூ இனால் ஒழுங்கு செய்யப்பட்ட விருது வழங்கும் வைபவம் துபாய், ஜேர்மனி ஹோட்டலில் மார்ச் 29, 2022 இல் இடம்பெற்றது. விருது வழங்கும் வைபவத்தின் போது துபாய் மற்றும் வடக்கு எமிரேற்ஸுக்கான இலங்கைத் தூதுவர் ஜெனரல் அலுவலகம் இலங்கை முதலீட்டுச் சபையைப் பிரதிநிதித்துவப் படுத்தியது.



சுதந்திர வலய விருதுகள்

வெநேமு புலனாய்வு சுதந்திர வலய விருதுகள் 2022

இமுச கட்டுநாயக்க ஏசெவ அதன் மீள்முதலீடு மூலோபாயத்திற்காக வெநேமு புலனாய்வு சுதந்திர வலயங்கள் விருதுகளின்போது அங்கீகரிக்கப்பட்டது

வெநேமு புலனாய்வு சுதந்திர வலய விருதுகள் 2022 இன்போது கட்டுநாயக்கவிலுள்ள இலங்கையின் மிகப் பெரிய ஏசெவ அதன் மீள்முதலீடு மூலோபாயத்திற்காக சிறப்பு மரியாதையுடன் அங்கீகரிக்கப்பட்டது. ஐஇ (UK) அடிப்படையிலான வெநேமு உளவுத்துறை சுதந்திர வலய விருது 2022 உலகெங்கிலுமுள்ள மிகவும் நம்பிக்கைக்குரிய சுதந்திர வலயங்களையும், சிறந்த முதலீட்டு சூழல்களையும், வணிக விரிவாக்கங்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்தி என்பவற்றிற்கான வாய்ப்புகளை வழங்கும் வலயங்களையும் அடையாளம் கண்டு, மதிப்பிடுவதுடன், பினான்ஸ் ரைம்ஸ் ஆசிரியர் குழுவும், (Finance Times Editorial team) பிராந்தியத்தைச் சேர்ந்த சுதந்திர நிபுணர்கள் குழுவும் நடுவர்களாக செயற்பட்டனர்.

ஏற்கெனவே உள்ள இமுச தொழில் முயற்சிகளின் திறன், உற்பத்தித் திறன், வளர்ச்சி. பல்வகைப்படுத்தல். மற்றும் விரிவாக்கம் என்பவற்றை அதிகரிக்க முயற்சிக்கின்றவற்றில், புதிய இமுச முயற்சிகளை இணைப்பதற்கு உதவுவதன் மூலம் வெநேமு உட்பாய்ச்சலை அதிகரிப்பதற்காக மீள்முதலீட்டு மூலோபாயம் ஆரம்பிக்கப்பட்டது. கௌரவ அங்கீகாரம் கிடைத்த திகதியளவில் வலயத்திலுள்ள 33 பெரிய குத்தகைக்காரர்களுள் நால்வர் ஐஅடொ 26.5 மிலி. முதலீட்டு உறுதிமொழியுடனும், ஏறத்தாழ 1000 வேலை வாய்ப்புகளுடனும் விரிவாக்கலை ஆரம்பித்துள்ளனர்.



முக்கிய நிகழ்வுகள்





முவமை (IFC)

முதலீட்டாளர்களுக்கு வசதியளிக்கும் மையம் (முவமை-IFC) ஆரம்பித்துவைத்தல்

இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) ஆனது ஒரு ஊக்கியாகவும், முதலீட்டை ஊக்குவிப்பதற்கு வசதி யளிப்பதற்காகவும் முதலீட்டாளர்களுக்கு வசதியளிக்கும் மையத்தை (முவமை) உலக வர்த்தக மையத்தின் (உவமை) மேற்கு கோபுரத்தின் 27 வது மாடியில் ஒரு இடத்தை அர்ப்பணித்து ஆரம்பித்து வைத்தது. முதலீட்டு ஒப்புதல் நடவடிக்கையை ஒழுங்கு படுத்துவதுடன், முகவர்களுக்கிடையே பரஸ்பர ஒருங்கிணைப்பைப் பலப்படுத்தும் அதேவேளை, முதலீட்டாளர்களுக்கு திறமையானதும், தடையற்றதுமான சேவையை வழங்குவதற்காகவும் இது ஆரம்பித்து வைக்கப்பட்டது.

முவமை, முதலீட்டாளர்கள் முகங் கொடுக்கும் தேவையற்ற தாமதங் களைக் கவனத்தில் கொள்வதன் மூலம் அவர்களின் நம்பிக்கையைப் பேண வேண்டியுள்ளது.

முவமை ஒரு நவீன வணிக வசதியளிக்கும் மையத்தினுள் முதலீட்டாளர்களுக்கு அவசியமான சந்திப்பு அறைகள், தகவல் மற்றும் விண்ணப்பம் சமர்ப்பிக்கும் கருமபீடங்கள் போன்றவற்றை அவர்களுக்கு வழங்கும் அதேவேளை, விடயங்கள் முதலீட்டாளர்களுக்கு சௌகரியமாகவும், வசதியாகவும் சிறந்த ஒழுங்கு முறையிலும் அமைக்கப்பட்டுள்ளது.

முவமை 2022 அக்டோபர் 20 அன்று முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் கௌ. திலும் அமுனுகமவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



பங்குதாரரைக் கண்டுபிடிப்பவர்

'பங்குதாரரைக் கண்டுபிடிப்பவர்' முதலீடுகளைக் கவர்வதற்கான ஒரு மேடை

இமுச ஏற்கெனவே நாட்டிலுள்ள முதலீட்டாளர்களிடமிருந்து முதலீடுகளைக் கவர்வதற்கும், வெளிநாட்டு மற்றும் இலங்கை கம்பனிகள்/முதலீட்டாளர்களுடன் வணிக பங்குதாரர்களுக்கு வசதியளிப்பதற்கும் முதலீட்டாளர்களுக்கு பங்குதாரரைக் கண்டுபிடிப்பவர் (பக) என்ற புதிய மூலோபாய முன்முயற்சியை அறிமுகம் செய்தது. இந்த தொடர்புகொள்ளக்கூடிய மேடை, இமுச இல் பதிவுசெய்யப்பட்ட முதலீட்டாளர்கள் மற்றும் எதிர்காலத்தில் வரக்கூடிய முதலீட்டாளர்களுக்கு புதிய தொழில்முயற்சியாளர்கள் மற்றும் புதிய எண்ணங்களுடனான புத்தாக்கம் செய்வோருடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கான சாளரத்தை வழங்குகிறது.

இந்த மேடை வெளிநாட்டு மற்றும் உள்ளூர் கம்பனிகள் இரண்டிற்குமான ஒரு வலைப்பின்னலாகத் தொழிற்படுவதுடன், வணிகங்கள் மற்றும், ஆய்வு மையங்கள் புதிதாக ஆரம்பிக்கவுள்ளவை தங்களுடைய அடுத்த கண்டுபிடிப்புகள் அல்லது வணிக முயற்சிகள் சரியான பங்குதாரர்களைக் கண்டுபிடிப்பதன் மூலம் வெற்றியடைவதற்கு உதவுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது. விவசாயம், ஆடைகள், உட்கட்டமைப்பு, அறிவு சேவைகள், உற்பத்தி, சேவைகள், சுற்றுலா மற்றும் பொழுதுபோக்கு, பயன்பாடுகள் போன்ற வணிக வகைகளுக்கு ஏற்ப கம்பனிகளின் விபரங்களைத் தரவுத் தளம் கொண்டிருக்கும்.

இந்த மேடையில் பதிவுசெய்யப்பட்டுள்ள கம்பனிகள் தங்களுடைய சுய விபரத்திலுள்ள தொடர்பு தகவல்களைப் பயன்படுத்தி, ஏனைய கம்பனி /முதலீட்டாளருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளக்கூடிய சந்தர்ப்பத்தைப் பெறுகின்றன.

முக்கிய நிகழ்வுகள்



நீண்ட கால வதிவிட விசா

முதலீட்டாளர்களுக்கு நீண்ட கால வதிவிட விசா நிகழ்ச்சி அறிமுகம் செய்தல்

இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) முதலீட்டாளர்கள், பங்குதாரர்கள் மற்றும் இமுச தொழில்முயற்சிகளுக்கென அர்ப்பணித்து, வணிகம் செய்வதை இலகுவாக்கும் பொருட்டு, சர்வதேச அளவுகோலுக்குப் பொருந்தும் வகையில், ஐந்து ஆண்டு வதிவிட விசா நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தது. இலங்கையில் செயற்படும்போது முதலீட்டாளர்களின் அனுபவத்திற்கு மேலும் வசதியளிப்பதற்காக இமுச இந்த நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தது. நீண்ட காலமாக தேவையானதென உணரப்பட்ட நீண்டகால விசா நிகழ்ச்சியானது முதலீட்டாளர் சமூகத்தினால் வரவேற்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சி 2022 ஜூலை 04 அன்று முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் கௌ. தம்மிக பெரேராவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.



விசா வசதியளித்தல்

நிகழ்நிலை (online) விசா சிபாரிசு முறைமை அதன் எண்மின் மாற்றத்தைத் துரிதப்படுத்துகிறது

இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) வணிகம் செய்வதை இலகுவாக்குவதை அதிகரிப்பதையும், எண்மின் மாற்றத்தைத் துரிதப் படுத்துவதையும் இலக்காகக் கொண்டு, குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம் மற்றும் பாதுகாப்பு அமைச்சுடன் இணைந்து இலங்கைக்கு வருகைதரும் சாத்தியமான முதலீட்டாளர்களுக்கும், இமுச இன் வரம்புக்கு உட்பட்ட சகல தொழில் முயற்சிகளுக்கும் நிகழ்நிலை விசா சிபாரிசு வழங்குவதற்காக விசா சிபாரிசு முறைமையை ஆரம்பித்து வைத்தது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்ட முறைமையின்படி, விசா சிபாரிசு மூன்று வகைகளின் கீழ், குறிப்பாக நுழைவு விசாக்கள், வதிவிட விசாக்கள் மற்றும் விசாக்களை நீடித்தல் என வழங்கப்படும். அத்துடன், இதற்கு விண்ணப்பிக்கத் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களாவோர் முதலீட்டாளர், ஊழியர்கள், முதலீட்டாளர்களில் தங்கியிருப்போர் மற்றும் தெரிவுசெய்யப்பட்ட ஊழியர்களுமாகும்.

புதுமையான முறைமையிலிருந்து முதலீட்டாளர்கள் / தொழில் முயற்சிகளுக்குக் கிடைக்கும் பாரிய நன்மை என்னவெனில் முதலீட்டாளர்கள் நேரடியாக இமுச க்கு வருகைதர வேண்டிய தேவையை நீக்குவதால் அவர்களுடைய நேரம் சேமிக்கப் படுகிறது. முதலீட்டாளர்கள் நிகழ்நிலை இணைய முகப்பைக் கண்காணிக்கக் கூடியதாகவும், செயற்பாட்டின் நிலையை மீளாய்வு செய்யக்கூடியதாகவும் உள்ளது.

செயற்பாடுகள் பூர்த்தியானதும், குறுஞ் செய்தி (SMS) மூலமும், மின்னஞ்சல் எச்சரிக்கை (Email alert) மூலமும் விண்ணப்பதாரருக்குத் தெரிவிக்கப்படும். விண்ணப்பதாரர் குடிவரவுத் திணைக்களத்திற்குச் சென்றால் அங்கு அவர்களுக்கு விசா வழங்கப்படும்.



முதலீட்டாளர்களுடனான அலுவல்கள்



நிகழ்நிலை வலைப்பக்கங்கள்

இலங்கையில் சாத்தியமான முதலீட்டு வாய்ப்பை இலக்கு வைத்தல்

2022 இல் புதிய முதலீட்டாளர்களைக் கவர்வதற்காக இலங்கையிலுள்ள சாத்தியமான முதலீட்டு வாய்ப்புகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குத் தொடராக நிகழ்நிலை வலைப்பக்கங்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கஷ்டமான காலங்கள் முதலீட்டாளர்கள் நாட்டில் புதிய முதலீடுகளில் ஈடுபடுவதற்கான புதிய வாய்ப்புகள் என்று இமுச கருதுகிறது. ஆகவே இமுச நாட்டில் புதிய முதலீடுகளை ஏற்படுத்துவதற்கான முயற்சியில் ஆக்கபூர்வமான திசையில் செல்வதை உறுதிப்படுத்துவதற்காக எதனையாவது கண்டுபிடிப்பதற்கு சாத்தியமானவை அனைத்தையும் ஆராய்கிறது.

முதலீட்டாளர்களுக்கு வழங்கப்படும் சேவைகளை ஒழுங்குபடுத்துவதற்காக அண்மையில் உலக வர்த்தக மையத்தின் மேற்கு கோபுரத்தின் 27வது மாடியில் திறக்கப்பட்ட முதலீட்டாளர்களுக்கு லசதியளிக்கும் நிலையம் (முவநி) பற்றிய விழிப்புணர்வை முதலீட்டாளர்கள் பெற்றுக்கொள்வதற்கான மேடையையும் வலைப்பக்க தொடர்கள் உருவாக்குகின்றன.



ஐயூ - இலங்கை

ஐயூ-இ (EU-SL) முதலீட்டாளர் உரையாடல் (வசதியளிக்கும் மன்றம்)

இமுச ஆனது நிதி அமைச்சு மற்றும் கொழும்பிலுள்ள ஐரோப்பிய யூனியன் பிரதிநிதிகளின் குழுக்களுக்கு இடையேயான இலங்கை – ஐரோப்பிய யூனியன் (ஐயூ) முதலீட்டாளர் உரையாடலின் ஒரு முக்கிய பங்குதாரராக இருந்தது. தற்போதுள்ள பொருளாதார நிலமை, போரக்ஸ் (Forex) சம்பந்தமான சவால்கள், முதலீடு மற்றும் வரி சம்பந்தமான கொள்கையில் நிலையான தன்மை மற்றும் இலங்கையில் ஒரு கம்பனியை நிறுவுவதற்கு ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட நடவடிக்கைக்கான தேவை என்பவை முக்கிய விவகாரங்களாக முன்னிலைப் படுத்தப்பட்டன. போக்குவரத்து மற்றும் தளவாட மையமாக இலங்கையை நிலைநிறுத்துதல், இலங்கையில் ஐயூ முதலீட்டை அதிகரிக்கச் செய்வதற்கு பொது தனிப்பட்ட பங்குதாரர்களுக்கு ஊக்கமளித்தல், சுகாதாரத் துறையை நவீனமயப்படுத்தல் என்பன பரஸ்பர ஆர்வமுள்ள விடயங்களாக இருந்தன.

2014 இல் இது ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து ஏற்கெனவே இருக்கும் ஐயூ முதலீட்டாளர்களுக்கு அவர்களுடைய கம்பனிகள் முகம் கொடுக்கும் பிரச்சனைகளுக்கான தீர்வைக் காண்பதற்கு சிரேஷ்ட அரச அதிகாரிகளுடன் கலந்துரையாடுவதற்கான ஒரு துரிதமான மேடையை ஐயூ - இலங்கை முதலீட்டாளர் உரையாடல் வழங்கியுள்ளது.



இமுச மற்றும் ஏஎச்கே

இமுச மற்றும் ஏஎச்கே முதலீட்டாளர் வசதியளித்தல் கூட்டம் - கஏசெவ

இமுச ஆனது இலங்கையிலுள்ள ஜெர்மன் கைத்தொழில் மற்றும் வர்த்தக (ஏஎச்கே இலங்கை) பிரதிநிதிகள் குழுவுடன் சேர்ந்து. கட்டுநாயக்க ஏசெவ இல் முதலீட்டாளர் வசதியளித்தல் கூட்டம் ஒன்றை நடத்தியது. கென்ரினென்ரல் ரயர்ஸ், கேஆர்ஏம்எஸ்கேஐ லங்கா, லங்கா லெதர், கொக்கோ லங்கா, லங்கா டயனமிக்ஸ் மற்றும் எஸ்கிமோ ஏபரல் அடங்கலாக இலங்கையில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் முன்னணி ஜெர்மன் கம்பனிகளின் சிரேஷ்ட முகாமைத்துவம் இதில் பங்குபற்றியது. ஜெர்மன் முதலீட்டாளர் சங்கம் இலங்கையில் வணிகம் செய்யும் வாழ்நாள் முழுவதுமான பங்குதாரர்கள் இலங்கையின் வெநேமு மரபுரிமையை "நகர்த்துகின்ற முதலாமவர்கள்" என்ற அந்தஸ்தைப் பெருமையுடன் கோரிக்கொள்கிறார்கள்.

தற்போதுள்ள முதலீட்டாளர்கள் முதலீட்டிலும், இலங்கையுடன் வணிகம் செய்வதை மீண்டும் பார்க்கவும், இலங்கையில் ஜெர்மன் முதலீட்டிற்கு எதிர்காலத்திற்கான வழியைக் காண்பதற்கு இரண்டு நாடுகளினதும் ஐக்கியத்தைத் தேடுவதுமே இந்தக் கூட்டத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது.

எங்களுடைய முதலீட்டாளர்களிடமிருந்து அறிந்துகொள்வது



எலிகன்ற் நிற்றிங்

பியகம ஏற்றுமதி செயலாக்க வலயம்

எங்களிடம் மிகவும் மேம்பட்டதும் தொழில்நுட்ப ரீதியாக சிக்கலான வகையானதுமான உபகரணங்கள் உள்ளன. ஒரு திறமையான தொழிற்படையணியின் ஆதாரத்துடன் இருக்கின்ற திறமையையிட்டு நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன். இலங்கையிலுள்ள தொழிற்படையணி மிகவும் திறமை வாய்ந்தவர்களும், ஆங்கிலம் பேசுகின்றவர்களும், பயிற்சி அளிக்கக்கூடியவர்களும் ஆவார்கள். என்னால் அவர்களுக்கு எங்களுடைய வணிகத்தில் நன்றாகப் பயிற்சி அளிக்கக் கூடியதாக உள்ளது.

இமுச மற்றும் அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் ஆதரவையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். தொற்றுநோய் காலம் முழுவதும் நாங்கள் எங்களுடைய தொழிற்பாடுகளைத் தொடர்ந்து செய்வதற்கும், தொடர்ந்து ஏற்றுமதி செய்வதற்கும் ஏராளமான வசதிகளைச் செய்ததை நான் கண்டிருக்கிறேன். நாங்கள் முகங்கொடுக்கும் நிதி நெருக்கடியிலும்கூட எங்களுடைய தொழிற்பாடுகளைத் தொடர்வதற்கும், உற்பத்தியைத் தொடர்ந்து செய்வதற்கும் இமுச இடமிருந்து ஏராளமான வசதிகள் எங்களுக்குக் கிடைத்தன.

திரு லூக் ஹொல்மிக்
பணிப்பாளர்



ஓஷன் லங்கா (தனி) லிமிடட்

பியகம ஏற்றுமதி செயலாக்க வலயம்

நாங்கள் தொடர்ந்து ஐஅ வாங்குபவர்கள், ஐஇ, ஐரோப்பா, கனடா, ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியாவுடன் தொடர்ந்து வணிகம் செய்ததுடன், விக்ரோறியாஸ் சீக்ரெற், மார்க்ஸ் அன்ட் ஸ்பென்ஸர், நெக்ஸ்ற், நைக், யூனிகோன், மற்றும் பியூமா போன்ற வர்த்தக குறியீடுகளுக்கும் சேவை செய்கிறோம். இவை அனைத்தும் எங்களுடைய முன்னுரிமை வாடிக்கையாளர்கள் ஆவார்கள்.

மிகவும் சிறிய அளவில் இருந்து இப்போது உள்ளவரை வளர்வதற்கு எங்களுக்கு உதவிய இமுச இன் ஆதரவினால் நாங்கள் மிக்க மகிழ்ச்சியடைகிறோம்.

டாக்டர் ஒஸ்ரின் சீகே ஏயூ
முகாமைத்துவ பணிப்பாளர்



சங்கிரிலா ஹோட்டல்

கொழும்பு

நிலப்பரப்பு. வனவிலங்குகள், வரலாறு மற்றும் கலாச்சாரம் சம்பந்தமாக இலங்கை வழங்கவேண்டிய பன்முகத் தன்மையின் அடிப்படையில் எதிர்வரும் ஆண்டுகளில் இலங்கை எந்தளவு தனித்துவம் வாய்ந்தது என்பதை மக்கள் மேலும் மேலும் உணர்ந்து கொள்வார்கள்.

திரு ஹோர்வி டுபொஸ்கியூ
பொது முகாமையாளர்

எங்களுடைய முதலீட்டாளர்களிடமிருந்து அறிந்துகொள்வது தொடர்ச்சி....







வெலிகம பீச் மரியற் றிசோட் அன்ட் ஸ்பா

இலங்கையிடம் வழங்குவதற்கு ஏராளமானவை உள்ளன. அதன் சலுகைகளின் அடிப்படையில் நாடு என்ன செய்யும் என்பதில் நான் மிகவும் ஆக்கபூர்வமானதாக இருக்கிறேன். இங்குள்ள வாய்ப்புகளைப் பார்க்கும்போது உண்மையில் வானம் தான் அதற்கு எல்லை. இங்கு செய்யக்கூடியவை ஏராளமானவை உள்ளன.

திரு பியூஷ் ருஆஜி
பொது முகாமையாளர்

ஜீஏசீ குரூப்

பியகம ஏற்றுமதி செயலாக்க வலயம்

கடல் தளவாடங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் இலங்கையிலுள்ள கடல் கைத்தொழில் என்பன இன்னும் இளம் கட்டத்திலேயே உள்ளன. ஆகவே இந்தக் கைத்தொழிலில் அதிகளவு வளர்ச்சியும், சாத்தியமும் உள்ளன. எதிர்கால முதலீட்டாளர்கள் வந்து இந்த கைத்தொழிலை அமைத்துக் கொள்ளுங்கள் என்று நான் அவர்களை அழைக்கிறேன். ஏனெனில் நீங்கள் உங்களுடைய அணுகுமுறையிலும், உங்களுடைய தீர்மானம் எடுக்கும் நடவடிக்கையிலும் மூலோபாயத்துடன் இருந்தால் ஏராளமான இலாபகரமான வருமானங்கள் கிடைக்கும். அப்போது இலங்கை பாரம்பரிய அந்நிய செலாவணியைத் தவிர, இந்தக் கைத்தொழிலில் இருந்து சாத்தியமான அந்நிய செலாவணியைச் சம்பாதிக்க முடியும்.

திரு ரவி எதிரிசிங்க
பணிப்பாளர்/பிநிஅ

எச்சீஎல் ரெக்னோலொஜீஸ் லங்கா

எச்சீஎல் உலகளாவிய ரீதியில் ததொ தீர்வுகளை வழங்கும் கம்பனி. உலகம் முழுவதிலும் 208,000 ஊழியர்கள் எங்களிடம் உள்ளனர். அத்துடன் நாங்கள் 52 நாடுகளிலிருந்து செயற்பட்டுக்கொண்டு இருக்கிறோம்.

இலங்கையில் நாங்கள் மிகுந்த திறமையைப் பார்த்திருக்கிறோம். உலகெங்கிலுமுள்ள ஐநூறு கம்பனிகள் அதிர்ஷ்டத்தை அடைவதற்கான சேவையை எங்களால் வழங்கக்கூடியதாக உள்ளது. எங்களிடம் 2000 ததொ வேலையாட்கள் உலகம் முழுவதிலுமுள்ள உலகளாவிய வாடிக்கையாளர்களுக்கு ஆதரவு வழங்கி, இலங்கையில் வேலை செய்துகொண்டு இருக்கிறார்கள்.

எங்களுடைய அனுபவத்தின் அடிப்படையில், நாங்கள் ஏனைய உலகளாவிய முதலீட்டாளர்களை ஒரு வாய்ப்பாக இலங்கையை ஆய்வுசெய்யும்படி அழைப்பதுடன், இமுச க்கும், அரச முகவர்களுக்கும் அவர்கள் எங்களுக்கு வழங்கிய ஆதரவுக்கு நாங்கள் மிகவும் நன்றியுடையவர்களாக இருக்கிறோம்.

திரு தொதாத்ரி
வதிவிட பணிப்பாளரும்
நிலைய தலைவரும்

சர்வதேச பங்குதாரர்களுடன் வேலை செய்தல்



எஸ்டீஜீ இன்வெஸ்ரர் மப்

இலங்கைக்கான எஸ்டீஜீ இன்வெஸ்ரர் மப்' க்காக ஐநாஅநி (UNDP) அரசு மற்றும் தனியார் துறை பங்குதாரர்

இலங்கையிலுள்ள ஐநாஅநி, அரசுடன் இணைந்து நேற்று தனியார் மூலதனத்தை, நாட்டின் நிலைபேறான இலக்கு, அரசாங்கத்தின் கொள்கைகள் மற்றும் சந்தை வாய்ப்பு என்பவற்றை ஊடறுக்கும் பிரிவுகளுக்கு திருப்புவதற்கான ஒரு சந்தைக் கருவியான இலங்கை எஸ்டீஜீ இன்வெஸ்ரர் மப் ஐ ஆரம்பித்துவைத்தது.

ஐநாஅநி, இலங்கை வர்த்தக சம்மேளனம் மற்றும் இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி கவுன்ஸில் என்பவற்றின் ஒத்துழைப்பின் விளைவே 'மப்' ஆகும். இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி கவுன்ஸிலானது இலங்கையில் நிலைபேறான அபிவிருத்தி 2030 நிகழ்ச்சி நிரலை அமுல்படுத்துவது பற்றிய ஒருங்கிணைப்பு, வசதியளித்தல், கண்காணித்தல், மதிப்பீடு செய்தல், அறிக்கையிடுதல் என்ற பொறுப்புக்களைக் கவனிக்கும் அரச நிறுவனமாகும்.

இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) யும் மப்பை அபிவிருத்தி செய்யும்போது உள்ளீடு மற்றும் சரிபார்ப்பை வழங்கியது. இரண்டாவது நிலை ஆய்வு, பொது மற்றும் தனியார்துறை நிறுவனங்களுடன் 50 க்கு மேலான உரையாடல்கள் என்பன மூலம் புதுப்பிக்கத்தக்க சக்தி, சுகாதார கவனம், உட்கட்டமைப்பு, உணவு மற்றும் பானங்கள் மற்றும் நுகர்வோர் பொருட்கள் என்ற ஐந்து நிஅஇ (SDG) முன்னுரிமைத் துறைகளிலுள்ள கருப்பொருளையும் வணிக மாதிரிகளையும் உள்ளடக்கியுள்ளதென 15 முதலீட்டு வாய்ப்பு பகுதிகளாக 'மப்' அடையாளம் கண்டுகொண்டுள்ளது.

ஹை - லெவல் இன்வெ பசிலிரேஷன்

ஆசியா மற்றும் பசுபிக் பொருளாதாரங்கள் எவ்வாறு நன்மையடையும்

ஆசியா மற்றும் பசுபிக்கிற்கான ஐக்கிய தேசிய பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்திக்கான ஆணைக்குழு (பொசஅஆ- ESCAP), சர்வதேச வர்த்தக மையம் (சவமை - ITC), தென் கிழக்கு ஆசிய நாடுகளுக்கான சங்கம் (தெகிஆநாச - ASEAN), ஜெர்மன் டெவலப்மென்ற் இன்ஸ்ரிரியூற்/ டொயிஷஸ் இன்ஸ்ரிரியூற் பொ என்ற்விக்லுங்ஸ்பொலிரிக் (DIE) மற்றும் வேல்ட் எக்கனொமிக் போறம் (WEF) என்பன இணைந்து அபிவிருத்திக்கான ஒருங்கமைத்த வசதியளித்தல் பற்றிய உயர் மட்ட பிராந்திய வட்டமேசையில் பங்குபற்றுவதற்கும், தன்னுடைய அபிப்பிராயத்தைப் பகிர்ந்து கொள்வதற்கும் இமுச இன் பணிப்பாளர் நாயகத்தை அழைத்திருந்தன. செப்டெம்பர் 2020 இல் ஆரம்பிக்கப்பட்ட வட்டமேசை தொடர், அரச அதிகாரிகளுக்கிடையே உலக வர்த்தக நிறுவன (WTO) பேச்சுவார்த்தைகள் மீதான அபிவிருத்திக்கான முதலீட்டு வசதியளித்தல் (அமுவ - IFD) ஒப்பந்தம் பற்றிய மூலோபாய பரிமாற்றத்திற்கான ஒரு மேடையை வழங்கியது.

24 ஆசிய மற்றும் பசுபிக் பொருளாதாரங்களிலிருந்து உயர் மட்ட கொள்கை வகுப்பாளர்கள், அரச அதிகாரிகள், தனியார் துறை பிரதிநிதிகள், சிறந்த கல்விமான்கள் ஆகியோர் வட்டமேசையில் பங்குபற்றினர். அவர்கள் எவ்வாறு நாடுகள் அபிவிருத்திக்கு முதலீட்டு வசதியளித்தல் (அமுவ) ஒப்பந்தத்தை தங்களுடைய வணிக சூழ்நிலையை அதிகரிப்பதற்கு மிகச் சிறந்த முறையில் பயன்படுத்தி மேலும் உயர்ந்த பெறுமதிசேர் முதலீட்டைக் கவர்தல், பொருளாதார வளர்ச்சி, எண்மின் பொருளாதார புதிய கண்டுபிடிப்புகள் மற்றும் நிலைபேறான அபிவிருத்தி என்பவற்றை ஊக்குவித்தல் பற்றியும் பேச்சுவார்த்தைகளைப் புதுப்பித்தல் மற்றும் அவற்றின் முன்னேற்றம் மற்றும் பிரதிபலிப்பை இற்றைப்படுத்தினர். மேலும் இந்த பிரதிபலிப்பு நடவடிக்கையானது பங்குபற்றியவர்களுக்கு அவர்களின் நாடுகளின் சர்வதேச அலுவல்கள், அவர்களுடைய நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் (நிஅஇ கள் - SDGs) மற்றும் அவர்களுடைய தேசிய சீர்திருத்த நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப உள்ளதா என்பதை உறுதிப்படுத்துவதற்கு உதவ முற்படுகிறது.



பணியாளர்களின் ஈடுபாடு



கூட்டாண்மை மூலோபாயம்

2022-2026 க்கான கூட்டாண்மை மூலோபாயத்தைக் கோடிட்டுக் காட்டுதல்

2022 ஆம் ஆண்டில் இமுச ஐந்து வருட கூட்டாண்மை மூலோபாயத்தை வெளியிட்டு வைத்தது. அதன் மூலம் அது முக்கியமான பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதை இலக்காகக் கொண்டுள்ளது. 2022 - 2026, இமுச மேலும் வெற்றியடைவதற்கு அதன் மூலோபாய நோக்கங்கள், கொள்கைகள், இலக்குகள் மற்றும் முக்கிய செயல்திறன் குறிகாட்டிகளை (முசெகு கள் - KPIs) கோடிட்டுக்காட்டியுள்ளது.

இமுச ஒன்றாகச்சேர்ந்த வருடாந்த வளர்ச்சி விகிதமான (ஒவவவி CAGR) 32% வெளிநாட்டு நேரடி முதலீட்டுடன் (வெநேமு) ஐஅடொ 3 பிலியனை 2026 இல் உட்பாய்ச்சயலாகப் பதிவுசெய்து வழங்க வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டுள்ளது. இந்த உட்பாய்ச்சலைப் பெறுவதற்கு ஏறத்தாழ ஐஅடொ 5 பிலியன் வெநேமு திட்ட ஒழுங்கை உருவாக்க வேண்டிய தேவை உள்ளது. இந்தத் தொகைகள் தற்போதைய முயற்சிகளுக்கு ஏற்ப முதலீட்டுக்கானதோர் இடமாக இலங்கையின் கவர்ச்சியை அதிகரிக்கச் செய்யுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இமுச, ஆசியாவின் நிலைபேறான முதலீடுகளுக்காக அதிசிறந்த கவர்ச்சிமிக்க கேந்திர நிலையமாக இலங்கையை மாற்றியமைத்தல் என்ற நோக்கை அடைவதற்காகத் தொழிற்பட்டு, புதிய தொழில்நுட்ப மாற்றம் மற்றும் புதிய கண்டுபிடிப்புகள் மூலம் அறிவு மற்றும் திறனை அதிகரிக்கும் அதேவேளை, ஏற்றுமதி அடித்தளம் மற்றும் வேலைவாய்ப்பின் எண்ணிக்கை, தரம் என்ற இரண்டையும் மேம்படுத்தக்கூடியதுமாக முதலீட்டைக் கவர்ந்து, தரத்தை ஈர்த்துத் தக்க வைப்பதுடன் நாட்டின் சாத்தியமானவற்றைத் துரிதமாக நிறைவேற்றுவதற்குப் பதிலளிக்கக்கூடியதாக அதன் பணியை ஆக்கியுள்ளது.



இமுச வாரிசு குழுமத்தை சீர்படுத்துகிறது

இமுச மேமுநி (PIM) உடன் அடுத்த மட்டத் தலைவர்களைப் பலப்படுத்துகிறது

அடுத்த மட்ட வாரிசு குழுமத்தை உருவாக்கும் முயற்சியில் இலங்கை முதலீட்டுச் சபை தேசத்தின் முகாமைத்துவ வழிகாட்டியாகிய மேலாண்மை முதுகலை நிறுவனத்துடன் (மேமுநி) இணைந்து சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்களுக்கு மூலோபாய தலைமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சியை வடிவமைத்தும், பிரதிப் பணிப்பாளர்களுக்கு முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சியை வடிவமைத்தும் ஆரம்பித்துள்ளது.

நிகழ்ச்சியின் ஆரம்ப வைபவம் அண்மையில் மேமுநி கேட்போர்கூடத்தில் இமுச இன் உயர் முகாமைத்துவம், 41 சிரேஷ்ட பிரதிப் பணிப்பாளர்கள் மற்றும் 30 பிரதிப் பணிப்பாளர்களின் பங்குபற்றுதலுடன் ஆரம்பமாகியது.

அலுவலர்களின் தனிப்பட்ட, கருத்தியல் மற்றும் தொழில்நுட்பத் திறன் என்பவற்றை அபிவிருத்தி செய்து, இறுதியில் அவர்கள் சிரேஷ்ட வகிபாகங்களை மேற்கொள்வதில் வெற்றியடைவதே இந்த நிகழ்ச்சியின் நோக்கமாகும். மேலும் எதிர்காலத்திலும் இவ்வாறான நிகழ்ச்சிகள் ஒருங்கமைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.



வணிக திறனை செம்மையாக்குவதற்கு எண்மின் மயமாக்கல்

நிறுவனத்திற்குள்ளே உள்ள திறமைகளை மேம்படுத்துதல்

தொற்றுநோய் காலத்தில் வரையறுக்கப்பட்டு பௌதீகமாக பிரசன்னமாக இருக்கின்ற சவாலை எதிர்கொள்ளும் பொருட்டு, ஒரு மிகச் சிறந்த தீர்வாக நிறுவனத்தை எண்மின் மயமாக்கல் என்ற எண்ணக்கரு உருவாகியதால் இமுச இன் கடமைகளில் முறையே குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்கெனவே வெளிவந்துள்ளன. உதாரணத்திற்கு, சீயூஎஸ்டீசீ கள் (சரக்கு பெறுபவரின் பெயர், முகவரி போன்ற சுங்க பிரகடனங்களை - CUSDECs) மி-சமர்ப் -பித்தல் போன்ற கடதாசியற்ற இறக்குமதி ஏற்றுமதி ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கு எண்மின் மயமாக்கப்பட்ட முறைமையின் மூலம் இறக்குமதி, ஏற்றுமதி வசதியளித்தலை அறிமுகம் செய்தல், இறக்குமதி ஏற்றுமதி முகாமைத்துவ நிகழ்நிலை போர்டல் (online portal), இறக்குமதி ஏற்றுமதி சரிபார்த்தல் கட்டணங்களுக்கும், மூலதனப் பொருட்கள் இறக்குமதிக்குமாக தானியக்கி முறைமை (Automated system), என்பன இது சம்பந்தமாக இமுச யினால் அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டதில் சிலவாகும். இவ்வாறு ஆரம்பித்து வைக்கப்பட்டவை விசேஷமாக உற்பத்தித் துறை கம்பனிகளின் இறக்குமதி, ஏற்றுமதி செயலாக்கத்தை இலகுவாக்கியுள்ளது. நேரத்தையும், செலவையும் சேமித்துள்ளது. இந்த முறைமை இமுச உடன் செயற்பட்டுக்கொண்டிருக்கும் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு தொழில் முயற்சிகள் இரண்டுக்குமானதாகும். இநதச் செயற்பாடு மூலம் சுங்க வீட்டு முகவர்களின் (சுவீமு CHA) பௌதீக பிரசன்னம் தவிர்க்கப்படும் அதேவேளை, சீயூஎஸ்டீசீ கள் முறைமை மூலம் மின்னணுவியலில் ஒப்புதல் வழங்கப்பட்டு, நேரமும், செலவும் சேமிக்கப்படுகிறது.

வலயங்களின் அபிவிருத்தி

15 இமுச வலயங்கள்

இமுச வலயங்களில் உட்கட்டமைப்பு அபிவிருத்தி

இலங்கை முதலீட்டுச் சபை நாடெங்கிலுமுள்ள 15 இமுச நிர்வகிக்கும் வலயங்களில் முதலீட்டாளர்களுக்கு வசதியளிக்கிறது. புதிய பொருளாதார, சமூக மற்றும் ஏனைய சவால்களிலும்கூட நாடு முழுவதிலும் இமுச இனால் சகல வலயங்களுக்கும் வசதியளித்து, இடையறாத தொழிற்பாட்டுக்கு 2022 முழுவதும் ஆதரவு வழங்கக்கூடியதாக இருந்தது.

முதலீட்டாளர்களுக்கு வலயங்களுக்குள் அதிகூடிய ஆதரவைக் கொண்டிருப்பதற்காக இமுச, ஏறாவூர் மற்றும் அம்பாந்தோட்டையில் அமைந்துள்ள இரண்டு புதிய வலயங்களோடு, ஏற்கெனவே உள்ள வலயங்களின் உட்கட்டமைப்பு அபிவிருத்திகளையும் தொடர்கிறது. புடவை மற்றும் மருந்தாக்கல் சம்பந்தமான முதலீடுகளுக்கு வசதியளிப்பதற்காக அர்ப்பணிக்கப்பட்ட இந்த இரண்டு வலயங்கள் அபிவிருத்தி செய்யப்படுகின்றன.


வலயங்களில் வழக்கமான உட்கட்டமைப்பை வழங்குவதோடு, வலய தொழில்முயற்சிகளின் எரிபொருள் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக இமுச எரிபொருள் நிரப்பும் நிலையங்களைக் கட்டுவதற்கு ஆரம்பித்துள்ளது. இவை நாட்டில் ஏற்பட்ட எரிபொருள் நெருக்கடியினாலும், அத்தகையதோர் நிலைமை மீண்டும் ஏற்பட்டால் இமுச வலயங்களில் உள்ள தொழில்முயற்சிகள் அதிகளவு பாதிப்பின்றி தொடர்ந்து செயற்பட முடியும் என்பதாலும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

மேலும், இமுச இன் புதிய நோக்கங்களுள் ஒன்றாக, 2022 இல் இமுச வலயங்களுக்குள் பசுமை தரத்தை ஸ்தாபித்தலை ஆரம்பித்து வைத்தது. இந்த நோக்கம் தேசிய அளவில் திடசங்கற்ப பங்களிப்புடன் (தேதிப) சீரமைக்கப்பட்டதாகும். அதற்கிணங்க, முதற்படியாக இந்த பசுமை வலய தொடக்கத்திற்கான சாத்தியம் மற்றும் வழிமுறைகளை ஆராய்வதற்காக கஏசெவ, ககைபூ மற்றும் வஏசெவ என்பன பசுமை வலயங்காக மாற்றுவதற்குத் தெரிவுசெய்யப்பட்டன.

வலய ஊழியர்களின் கேள்வி அதிகரிப்பைக் கருத்தில்கொண்டு,கஏசெவ இல் பகல் நேர பராமரிப்பு வசதியுடனான மாணவர் கற்கும் மையத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது. இதனை ஆரம்பித்துவைப்பதன் மூலம் தொழிற்படையில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்குமென கஏசெவ எதிர்பார்க்கிறது. இது நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கியமானதோர் காரணியாகும்.

உணவு பாதுகாப்பிற்கான தேவையைக் கருத்தில் கொண்டு, இமுச பணியாளர்களின் பங்குபற்றுதலுடன் அவர்களுக்கு அறிவையும், அனுபவத்தையும் வழங்குவதற்கு, காய்கறி பயிரிடும் நிகழ்ச்சிகள் வலயங்களில் ஆரம்பிக்கப்பட்டன. இவை அவர்களது சொந்த வீட்டுத் தோட்டங்களைப் பராமரிப்பதற்கும் விரிவாக்கப்பட முடியும்.

2022 இல் இமுச இனால் வலயங்களுக்கு புதிய முதலீடுகளைக் கவரக்கூடியதாக இருந்தது. அவற்றுள் லன்வா சன்ஸ்தா சீமென்ற் கோப்பரேஷன் (தனி) லிமிடட் ஒரு விசேஷ திட்டமாகும். இந்த நிறுவனம் பிராந்தியத்தில் மிகப் பெரிய சீமெந்து உற்பத்தியாளர்களில் ஒன்றானதாக 2022 இல் வர்த்தக செயற்பாடுகளை ஆரம்பித்தது.




உலக முதலீடுகளின் போக்கு 2022 - 2023

உலகளாவிய வெநேமு இன் நிலையற்ற போக்கு கோவிட்-19 தொற்றுநோய் காரணமாக 2020 இல் பதியப்பட்ட செங்குத்தான வீழ்ச்சிக்குப் பின்னர் 2021 இல் வலுவான மீளுருவாக்கமான 64% ஐத் தொடர்ந்து 2022 இல் 12% இனால் வீழ்ச்சியடைந்து, ஐஅடொ 1.3 திரிலியனாகச் சரிந்தது. 2022 இல் வெநேமு இன் வீழ்ச்சியானது பெரும்பாலும் உலகளாவிய நெருக்கடிகள் ஒன்றோடொன்று பதிந்ததால் ஏற்பட்டது. - உக்ரைன் போர், அதிகரித்த உணவு மற்றும் சக்தி விலைகள், உயர்ந்துவரும் பொது கடன்கள் என்பனவாகும்.

இந்தச் சரிவானது அபிவிருத்தியடைந்த பொருளாதாரங்களில் பன்னாட்டு தொழில்முயற்சிகளின் (பதொ கள்) நிதிசார் பரிவர்த்தனைகளினாலேயே பெரும்பாலும் ஏற்படுத்தப்பட்டதாகும். முக்கியமாக ஐரோப்பாவிலும், வட அமெரிக்காவிலும் வெநேமு 37% இனால் வீழ்ச்சியடைந்து ஐஅடொ 378 பிலியனாகியது. எவ்வாறாயினும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் வெநேமு உட்பாய்ச்சல் 4% இனால் அதிகரித்து ஐஅடொ 916 பிலியனாகி, உலகளாவிய பாய்ச்சலின் 70% ஆகி, உயர்ந்த சாதனையின் பங்கின் அளவாகியது. குறைந்த வளர்ச்சியடைந்த நாடுகளும் (குவநா கள்) கீழ்நோக்கிய போக்கை உணர்ந்து, 16% இனால் ஐஅடொ 22 பிலியன் ஆக வீழ்ச்சியடைந்தது. இது உலகளாவிய வெநேமு பங்கின் 2% இலும் குறைவாகும்.

படம் 1 : உலக வெநேமு உட்பாய்ச்சல்கள் 2020 - 2022 (ஐஅடொ பிலியன்கள்)



மூலம்: யுஎன்ரீடீ (உலக முதலீட்டு அறிக்கை 2023)

அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகள் வெநேமு இன் மிகப் பெரிய பங்கினை பதிவு செய்திருந்த போதிலும், அதிகளவிலான வளர்ச்சி சில பெரிய வளர்ந்துவரும் பொருளாதாரங்களில் கவனம் செலுத்தி, அது சமமற்ற முறையில் பகிரப்பட்டது.


2021 போன்று வெநேமு இல் அதே அளவைக் (ஐஅடொ 662 பிலி) கவர்ந்த போதும், ஆசியா உலகளாவிய வெநேமு இல் 50% இற்கு மேலாக கணக்கிடப்பட்டது. இந்தியா மற்றும் ஆசியான் உறுப்பு நாடுகளே வெநேமு இல் முறையே 10% மற்றும் 5% அதிகரிப்புடன் அதிகளவு மீள்தன்மையுடைய பெறுனர்களாவார்கள். உலகில் இரண்டாவது மிகப் பெரிதாக வெநேமு ஐ நடத்துகின்ற நாடாக இருக்கும் சீனாவும் வெநேமு இல் 5% அதிகரிப்பையே குறித்தது.

ஆபிரிக்காவில் 2021 இல் அதன் ஒற்றைப் பரிவர்த்தனை வெநேமு அதிகரிப்பு சான்று இருந்தபோதும், 2020க்கு முன்னரான தொகைக்குத் திரும்பி ஐஅடொ 45 பிலி. ஐப் பதிவு செய்தது. எவ்வாறாயினும் பசுமைவயல் திட்டங்கள் 39% இனாலும், பிராந்தியத்திற்குள் சர்வதேச திட்ட நிதி 5% இனாலும் அதிகரித்ததோடு, சக்தி துறை மிகப் பெரிய அதிகரிப்பை உணர்ந்தது, லத்தீன் அமெரிக்காவும் கரீபியன் பிராந்தியமும் அதன் அதிஉயர் வெநேமு மட்டத்தைப் பதிவுசெய்து ஐஅடொ 208 பிலி. ஐ அடைந்தது. இது முன்னயை ஆண்டுகளிலிருந்து 51% அதிகரிப்பாகும். இது பெரும்பாலும் பிரித்தெடுக்கும் கைத்தொழில்களின் வெளிநாட்டு இணைப்புகளிலிருந்து மறு முதலீடுகளின் வருவாய் அதிகரிப்பின் காரணமாகும்.




கைத்தொழில் போக்கினைப் பொறுத்தளவில் உட்கட்டமைப்பு மற்றும் உலகளாவிய பெறுமதி சங்கிலி (உபெச)-தீவிர கைத்தொழில்களில் திட்ட எண்ணிக்கையில் ஓர் அதிகரிப்பும், சக்தியில் நிலையான எண்ணிக்கையும், மின்எண் பொருளாதார துறைகளில் வேகக் குறைவும் இருந்தன. பசுமைவயல் முதலீட்டு திட்ட அறிவிப்புகள் 2022 இல் அநேகமான பிராந்தியங்களிலும், துறைகளிலும் 15% வரை வளர்ந்துள்ளன. மின்னணுவியல், வாகனம் மற்றும் இயந்திர கைத்தொழில்கள் அடங்கலான விநியோக - சங்கிலி அழுத்தங்கள் மீள்கட்டமைப்புக்கு முகம்கொடுத்த உபெச தீவிர கைத்தொழில்கள், திட்ட எண்ணிக்கைகளும், பெறுமதிகளும் வளர்வதை அவதானித்தன. அறிவிக்கப்பட்ட ஐந்து மிகப் பெரிய முதலீட்டு திட்டங்களில் மூன்று திட்டங்கள் உலகளாவிய சிப் (Chip) பற்றாக்குறைக்குப் பதிலாக அரைக் கடத்திகளில் (Semi Conductors) ஈடுபட்டன.

2022 இல் சூரிய மற்றும் காற்று அடங்கலாக புதுப்பிக்கத்தக்க சக்தி உற்பத்தியும், அவற்றின் விநியோக சங்கிலியும் தொடர்ந்து வளர்ச்சியடைந்தன. இருந்தபோதும் 2021 இல் பதிவுசெய்யப்பட்ட 50% வளர்ச்சியிலும் பார்க்க 8% குறைவான வேகத்திலாகும். 2021 மற்றும் 2022 இல் முக்கியமான கனிமங்களில் அறிவிக்கப்பட்ட புதிய திட்டங்களின் எண்ணிக்கை கடந்த பத்தாண்டுகளின் சராசரி அளவைவிட இரண்டு மடங்கு அதிகமாக இருந்தது. குறிப்பாக 2022 இல் பற்றரி உற்பத்தித் திட்டங்கள் ஐஅடொ 100 பிலி. க்கு கூடுதலாக மூன்று மடங்காகியது. எவ்வாறாயினும் இந்த முதலீடுகள் ஐக்கிய அமெரிக்க நாடுகள் மற்றும் ஐரோப்பிய உற்பத்தி மையங்களிலும், வெகு சில அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளிலும் கவனம் செலுத்தி, கணிசமான முதலீடுகளைக் கவர்கின்றன.




படம் 2: அறிவிக்கப்பட்ட பசுமைவயல் திட்டங்கள் 2020 - 2022



மூலம்: யுஎன்சீஈடீ (உலக முதலீட்டு அறிக்கை 2023)

படம் 3: அறிவிக்கப்பட்ட பசுமைவயல் திட்டங்கள், தெரிந்தெடுக்கப்பட்ட கைத்தொழில்கள், 2021 - 2022 (ஐஅடொ பிலி) - உயர் கைத்தொழில்கள் பெறுமதி அடிப்படையில



மூலம்: யுஎன்சீஈடீ (உலக முதலீட்டு அறிக்கை 2023)

முன்னோக்கிய பாதை



2020 இலிருந்து இலங்கை கொரோனா வைரஸ் தொற்றுநோயுடன் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தது. இது நாட்டின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அபிவிருத்தியில் கடுமையான பாதிப்பை ஏற்படுத்தியது. எவ்வாறாயினும் இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) 2023 இல் ஒரு பொருளாதார மீட்சி என்ற எதிர்பார்ப்புடன், இமுச இன் கூட்டாண்மைத் திட்டம் 2022 - 2026 இல் கருதப்பட்டவாறு 2023 அளவில் பல்வேறு வருங்கால இலக்குகளை அமைத்துள்ளது.

வெநேமு உட்பாய்ச்சல்கள்

பல்வேறு வகையான திட்டங்களுடன் வரும் முதலீடுகளுடன் 2023 இல் ஐஅடொ 1.3 பிலி. பெறுமதியான வெளிநாட்டு நேரடி முதலீட்டை (வெநேமு) உள்ளே கவருவதற்கு இமுச இலக்குவைத்துள்ளது.

வேலைவாய்ப்பு

வேலைவாய்ப்பை உருவாக்குவது மற்றும் செயல்படுத்தப்படுகின்ற திட்டங்கள் சம்பந்தமாக கடந்த கால செயலாற்றுகையைக் கருத்தில் கொண்டு, 2023 அளவில் இமுச கம்பனிகளில் 560,000 ஒட்டுமொத்த வேலைவாய்ப்பை உருவாக்குவதை இமுச நோக்கமாகக் கொண்டுள்ளது.

ஏற்றுமதி வருவாய்கள்

கடந்த கால போக்குடனும், இமுச இன் பதிவுசெய்யப்பட்ட கம்பனிகளின் ஏற்றுமதி செயலாற்றுகைளை அதிகரிப்பதற்கான சாத்தியங்களுடனும் இமுச அமெரிக்காவிற்கான அதன் வணிக ஏற்றுமதிகளை 2023 இல் ஐஅடொ 10,400 மிலி. ஆக அதிகரிப்பதற்கு எண்ணியுள்ளது.

முதலீடுகளுக்காக காணி இருப்பு

2023 இல் முதலீடுகளுக்காக ஏறத்தாழ 464 ஏக்கர் மேலதிக காணிகள் அபிவிருத்தி செய்யப்படும்.

வலய அபிவிருத்தியும் முகாமைத்துவமும்

2023 ஆம் ஆண்டுக்கு முதலீட்டாளர்களுக்கான அபிவிருத்தியடைந்த காணிகள் பற்றாக்குறை என்ற பிரச்சனையைத் தீர்ப்பதற்காக இமுச பின்வரும் ஏற்றுமதி செயலாக்க வலயங்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்குத் திட்டமிடுகிறது:

- பிங்கிரிய ஏற்றுமதி செயலாக்க வலயம்
- வகவத்த கைத்தொழில் வலயம்
- அம்பாந்தோட்டையில் புதிய வலயங்கள் அபிவிருத்தி
    1. மருந்தாக்க வலயம் - அரபொக்க
    2. அரபொக்க வலய அபிவிருத்தி மற்றும்
    3. மிரிஞ்ஜாவில ஏற்றுமதி செயலாக்க வலயம்
- ஏறாவூரில் புடவை உற்பத்தி வலயம்
- கிழக்கு மாகாணத்தில் புதிய வலயங்கள்

(அமைவிடங்கள் அடையாளம் காணப்படவேண்டும்)

மனித மூலதனம்

எங்கள் மக்கள்

பொதுச் சேவைக்கான வலுவான உணர்வினால் இட்டுச் செலலப்படுகின்ற எங்களுடைய மக்களே நிறுவனத்தையும், தேசத்தையும் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தியை நோக்கி பெருமளவில் இட்டுச்செல்கின்ற இமுச இன் பயணத்தில் அடிப்படையானவர்களாவார்கள்.

இந்தத் தேசிய பொறுப்புக்கு தூண்டுதலாக எங்களுடைய மக்களுக்குத் தேவையான தொழில்சார் மற்றும் தனிப்பட்ட ஆதரவு தொடர்ந்து வழங்கப்படுகிறது.

அரச துறையில் அதிகளவு தேடப்படும் நிறுவனங்களில் ஒன்றான இமுச 1978 இல் ஆரம்பிக்கப்பட்டது முதல் பல்வேறு பின்னணியைக் கொண்ட மக்களுக்கு வேலைவாய்ப்பு வழங்கியுள்ளது. அதன் பிரதிபலனாக இமுச மாறுபட்ட கண்ணோட்டங்களுடனான திறமையான குழுக்களைக் கொண்டுள்ளதுடன் இதுவே நாட்டை சர்வதேச அரங்கை நோக்கி எடுத்துச் செல்வதற்கான இமுச இன் பலமும் ஆகும். நிறுவனத்தின் அமைப்பு பல தரப்பட்ட திறமைகளை உருவாக்கக்கூடியதாக உள்ளது.

மனித வளங்களின் கொள்கைகள்

சபைக்குள் மனித வளங்களின் நடைமுறைகளானது மூன்று விரிவான கொள்கைகளினால் வழிநடத்தப்படுகிறது. இந்தக் கொள்கைகள் ஒவ்வொரு மக்களின் கடமையிலும் சபை பின்பற்றவேண்டிய சிறந்த நடைமுறைகளுக்கான அத்திவாரத்தை இடுகின்றன.

மனித வளங்களின் கொள்கை கைநூல்

மனித வளங்களின் கொள்கைக் கைநூல் ஒவ்வொருவரினதும் கடமையின் கீழ் ஒருமைப்பாடு மற்றும் நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு உள்ளது. மேலும் எங்களுடைய நடைமுறைகள் மக்களை மையமாகக்கொண்டதும், எல்லோருக்கும் நியாயமானது என்பதையும் உறுதிப்படுத்துகிறது. அது ஆட்சேர்த்தல் மற்றும் தெரிவு நடைமுறைகள், தகுதிகாணல் மற்றும் பதவியை உறுதிப்படுத்துதல், ஊதியம், வேலை நேரங்கள், வரவு மற்றும் விடுமுறைகள், செயலாற்றுகையை மதிப்பிடல், பயிற்சி மற்றும் அபிவிருத்தி என்பவற்றை ஆளுகிறது. அது மேலும் பதவி உயர்வு, இடமாற்றம், மற்றும் பதவி இறக்கம், வேலைக்கான நிபந்தனைகள், குறைகள் மற்றும் தொழிற்சங்கங்கள் சம்பந்தப்பட்ட விடயங்கள் போன்றவை பற்றிய சகல நடைமுறைகளுக்கும் வழிகாட்டல்களை வழங்குகிறது.

பணிப்பாளர் சபையின் ஒப்புதலின்படி நியாயமான விலகல் ஏற்பட்டாலேயன்றி. நாங்கள் தொடர்ந்தும் மனித வளங்கள் கொள்கை கைநூலிலுள்ள வழிகாட்டல்களைப் பின்பற்றி வருகிறோம்.

ஆட்சேர்ப்பு திட்டம்

ஆட்சேர்ப்பு திட்டம் ஆட்சேர்ப்பு நடைமுறைக்கான வழிகாட்டல்களைத் தெளிவாகக் கூறுகிறது. இவை உள்வாரியாக அல்லது வெளிவாரியாகத் திறமைகளை உள்வாங்கும்போது கடுமையாகப் பின்பற்றப்படுகின்றன.

ஒழுக்காற்று விதி

இமுச இல் நாங்கள் தொழிலாளுமையையும், உறுதியான பணி நெறிகளையும் ஊக்குவிக்கின்றோம். நாங்கள் நெறிமுறை நடத்தையையும் நம்புவதுடன் எல்லா நேரங்களிலும் எங்களுடைய நிறுவனத்தின் மதிப்பினை நிலைநிறுத்துகிறோம். அவ்வாறு, இமுச இன் ஒழுக்காற்று விதி சபையின் சகல ஊழியர்களிடமிருந்தும் எதிர்பார்க்கப்படும் நெறிமுறை நடத்தைக்கான வழிகாட்டுதலை வழங்குகிறது. 'நடத்தை விதி' மற்றும் 'ஒழுக்காற்று சட்ட செயல்முறை'யின் கீழான ஒழுக்காற்று விதியானது சபையின் ஊழியர்களின் தவறான நடத்தை அல்லது தவறு செய்யப்பட்ட எந்தவொரு சம்பவத்திலும் பின்பற்றவேண்டிய செயற்பாட்டை வழங்குகிறது.

மக்களை முகாமைத்துவம் செய்வதில் எங்களுடைய அணுகுமுறை

இமுச மக்களை மையமாகக்கொண்ட மிகவும் வலுவான நடைமுறைகளைப் பின்பற்றுவதுடன்,அவ்வாறு செய்வதால் ஊக்கம் சந்தோஷம் இரண்டுடனுமான ஒரு தொழிலாளர் படையைக் கொண்டிருக்க முடிகிறது. இதனால், நிறுவனத்திற்கான மதிப்பை உருவாக்குவதன் மூலம் எங்களுடைய தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதை உறுதிப்படுத்துகிறது. எங்களுடைய மனித வளங்கள் முகாமைத்துவத்தின் கடமைகளாவன ஆட்சேர்த்தல் மற்றும் தெரிவு, மனித வள அபிவிருத்தி, இழப்பீடு மற்றும் ஊழியர் நலன்புரிமற்றும் ஒழுக்காற்று என்ற வரம்பிலிருந்தாகும். அமுல்படுத்தப்பட்டு, மையமாகக் கண்காணிக்கப்படும் இந்தக் கடமைகள் எங்களுடைய மக்கள் சபையில் தொழில் செய்யும் காலம் முழுவதும் நன்கு ஆதரிக்கப்பட்டு, கவனிக்கப்படுவதை உறுதிசெய்கிறது. இந்தக் கடமைகளை நாங்கள் நிறைவேற்றும்போது சமத்துவம், பக்கச்சார்பின்மை மற்றும் நெறிமுறை என்பவற்றை நடைமுறைப்படுத்துவதற்கும், செய்துகாட்டுவதற்கும் முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

பொதுச் சேவையானது இமுச இன் பகிரப்பட்ட நோக்காகவும், உந்துசக்தியாகவும் இருப்பதால் எங்களுடைய மவ (HR) கடமைகளானது அரச சட்டங்கள், ஒழுங்கு முறைகள், கொள்கைத் தீர்மானங்கள் என்பவற்றுடன் துல்லியமான இணக்கத்தை உறுதிசெய்கின்றன. வெநேமு ஐக் கவருவதற்கும் வசதியளிப்பதற்குமான உச்ச நிறுவனமான இமுச க்கு எங்களுடைய தேசத்திற்காக உள்ள பொறுப்பை நாங்கள் குறைத்து மதிப்பிடுவதில்லை. ஆகவே இந்தத் தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதற்கு எங்களுடைய மக்களை இட்டுச்செல்வதற்காக ஒவ்வொரு அடியும் எடுக்கப்படுகிறது. மவ கடமைகள் அனைத்தும் நிலையானதன்மை மற்றும் நம்பகத்தன்மை என்பவை தொடர்பாக அரச நிறுவனங்களைப் பாதுகாப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கைளினால் வழிநடத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

ஆட்சேர்ப்பு மற்றும் தெரிவுக் கடமைகள் ஒரு வெளிப்படையான நடைமுறை மூலம் சரியான நேரத்தில் சரியான திறமை உள்ளதை உறுதிப்படுத்தும் அதேவேளை மனித வள அபிவிருத்தி கடமை எங்களுடைய மக்களின் தொழில்துறை அபிவிருத்தியை உறுதிப்படுத்துகிறது. இழப்பீடு, நன்மைகள் மற்றும் தொழிலாளர் நலன்புரி கடமைகள் எங்களுடைய மக்களுக்கு நியாயமான முறையில் இழப்பீடு வழங்கப்படுவதையும், அவர்களின் நல்வாழ்வு கவனிக்கப்படுவதையும் உறுதிசெய்கிறது.

இந்த முறைமைகள் அனைத்தும் எங்களுடைய ஊழியர்களுக்கு ஆதரவு வழங்க உள்ளதுடன், அவர்கள் வேலையிலும், வேறு இடங்களிலும் பொறுப்புடன் தங்களை நடத்திக்கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. ஒழுக்காற்றுக் கடமையானது ஊழியரின் தவறான நடத்தை உடனடியாகக் கவனிக்கப்பட்டு, வேலைக்கு சாத்தியமான இடையூறு ஏற்படுவதைத் தணிப்பதை உறுதிப்படுத்துகிறது.


எங்களுடைய மக்களின் அமைப்பு

இமுச அணி முழுமையாக கொழும்பிலுள்ள தலைமையகத்தில் 418 எண்ணிக்கையான மக்களையும், நாடெங்கிலும் ஏனைய வெவ்வேறு இடங்களில் 780 எண்ணிக்கையான மக்களையும் கொண்டுள்ளது. எங்களுடைய ஊழியர்கோப்பில் மூன்று ஊழியர் பிரிவுகள் உள்ளன. எங்களுடைய அணியில் 47% ஆன நிறைவேற்று மட்டத்திலான ஊழியர்கள் தலைமையகத்திலும், ஏற்றுமதி செயலாக வலயங்களிலும் பூங்காக்களிலும் இருக்கிறார்கள். மிகுதி 53% ஆன எங்களுடைய அணியில் நிறைவேற்று அதிகாரமல்லாத தரத்தில் முமகாமைத்துவ உதவியாளர்களும், ஆரம்ப நிலை பணியாளர்களும் அடங்குவர். முழு அணியிலும் 21% முகாமைத்துவ உதவியாளர்களாவார்கள். 31% ஆனி தர பணியாளர்களாவார்கள்.

இமுச இல் நாங்கள் பன்முகத்தன்மையை ஊக்குவிப்பதுடன் ஆதரவுமளிக்கிறோம். அது எங்களுடைய மிகப்பெரிய பலங்களில் ஒன்றென நாங்கள் நம்புகிறோம். சபைக்குள் ஆண்களுக்கும் பெண்களுக்கும் அவர்களின் தொழில் மூலம் முன்னேறுவதற்கு ஒரேமாதிரியான வாய்ப்புக்களை நாங்கள் வழங்குகிறோம். ஆண், பெண் பிரதிநிதித்துவம் சகல ஊழியர் பிரிவிலும் புலப்படும்.

எங்களுடைய அணி பல்வேறு கல்விசார் மற்றும் தொழில்துறை பின்னணிகளைக் கொண்ட ஊழியர்களை உள்ளடக்கியதாகும். 1198 ஊழியர்களில் 564 பேர் நிறைவேற்று பிரிவைப் பிரதிநிதித்துவப் படுத்துகின்றனர். அவர்களுள் 331 பேர் பட்டதாரிகளாவார்கள். அவர்களுள் 166 பேர் முதுமானி பட்டம் பெற்றவர்களும், 54 பேர் தொழில்துறைசார் நிறுவனங்களில் அங்கத்துவம் பெற்றவர்களுமாவார்கள். எங்களுடைய ஊழியர்கள் வணிக நிர்வாகம், விஞ்ஞானம், பொருளாதாரம், பொறியியல் பொது முகாமைத்துவம், கணக்கியல், சமூக விஞ்ஞானம், சட்டம் மற்றும் சுங்க நிர்வாகம் போன்ற பல்வேறு துறைகளிலிருந்து வருகின்ற பன்முகத்தன்மையான கல்விப் பின்னணிகளை கொண்டிருப்பதால் சபை தொடர்ந்தும் அதிகளவு அனுகூலங்களைப் பெறுகிறது.

நாங்கள் தொழிற்பட்டுக்கொண்டிருக்கும் கைத்தொழிலிலுள்ள கடுமையான போட்டி என்ற சந்தர்ப்பத்தில் குறிப்பாக எங்களுடைய ஊழியர்களின் தொடர்ச்சியான தொழில்துறைசார் அபிவிருத்தியானது நிறுவனத்தின் வெற்றிக்கு முக்கியமானது என்பதை நாங்கள் நம்புகிறோம். ஆகவே ஊழியர்கள் தமது தொழில்துறை அபிவிருத்தி இலக்குகளைத் தொடர்வதற்கு சபை வழங்கும் ஆதரவைப் பிரதிபலிக்கக்கூடியதாக கற்றலுக்கான பரந்த அனுசரணை கொள்கைகள், பதவி உயர்வுக் கொள்கை மற்றம் விடுமுறைக் கொள்கைகளை சபை அறிமுகப்படுத்தியுள்ளது.




பயிற்சியும் அபிவிருத்தியும்

இமுச இல் நாங்கள் ஊழியர்களுக்கு அவர்களின் தொழில்துறைசார் மற்றம் தனிப்பட்ட அபிவிருத்திக்கு ஆதரவு அளிக்கிறோம். அதனால் நாங்கள் நிறைவேற்று அதிகாரமுடையவர்களுக்கும், நிறைவேற்று அதிகாரமற்ற தரத்தினருக்கும், ஆரம்ப மட்ட ஊழியர்களுக்கும் 16 உள்ளக பயிற்சி நிகழ்ச்சிகளையும், 40க்கும் மேற்பட்ட வெளிவாரி பயிற்சி நிகழ்ச்சிகளையும் நடத்தினோம். ஏறத்தாழ 400 நிறைவேற்று அதிகாரமுடைய தரத்திலுள்ள ஊழியர்கள் உள்ளக பயிற்சி மூலமும், வெளிவாரி பயிற்சி மூலமும் பயிற்றப்பட்ட அதேவேளை 250 நிறைவேற்று அதிகாரமில்லாத மற்றும் ஆரம்ப மட்ட ஊழியர்களும் பயிற்றப்பட்டுள்ளனர்.

மேலும் சிரேஷ்ட பிரதி பணிப்பாளர்களுக்கு ஒரு மூலோபாய தலைமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சியும், பிரதி பணிப்பாளர்களுக்கு முகாமைத்துவ அபிவிருத்தி நிகழ்ச்சியும் ஸ்ரீ ஜயவர்த்தன பல்கலைக் கழக மேலாண்மை முதுகலை நிறுவனத்துடன் இணைந்து அமுல் நடத்தப்பட்டன. இந்த நிகழ்ச்சியானது சிரேஷ்ட அலுவலர்கள் அடுத்த மட்டத்திலான பொறுப்புக்களை எடுக்கக்கூடியதாக அவர்களின் தனிப்பட்ட, கருத்தியல் மற்றும் தொழில்நுட்பத் திறன் என்பவை அடங்கலாக தலைமைத்துவம்/முகாமைத்துவ திறன்களை அபிவிருத்தி செய்வதை நோக்கியுள்ளது.

மவ (HR) இன் பாகம்

உலகளாவிய ரீதியில் தொற்றநோயின் வெளிப்பாட்டைத் தொடர்ந்து நாட்டின் பொருளாதார நெருக்கடியுடன், எங்களுடைய தேசிய பொறுப்பை நிறைவேற்றுவதை நோக்கிய எங்களுடைய பயணம் மேலும் சவால் மிக்கதாகவும், கடினமானதாகவும் ஆகியுள்ளது. இருந்தபோதும், மவ ஆக நாங்கள், எங்களுடைய ஊழியர்கள் இன்னும் நடைமுறையிலுள்ள பொருளாதார மற்றும் சமூக சவால்களைக் கடந்துசெல்லும்போது அவர்களுக்குள்ளே உள்ள சிறந்தவற்றை வெளிப்படுத்துவதற்கு அவர்களை ஆதரிப்பதற்குக் கடமைப்பட்டுள்ளோம். மவ ஆனது தமது மக்களுக்கும், வணிகத்திற்கும், குறிப்பாக தொழில்நுட்பத்தை ஏற்றுக்கொள்வது, சுறுசுறுப்பான பணிச் சூழல்களை உருவாக்குதல், தறனைக் கட்டியெழுப்புதல் என்ற பகுதிகளில் மக்கள் தங்களை சிறந்த பதிப்புகளாக மாற்றுவதற்கு ஆதரவு அளிக்கும் புதிய வழிகளுக்கு அதன் பாகத்தைத் தொடர்ந்து ஆராய்கிறது.



சமூக தாக்கம்



தேபகைபஅ (NAITA) உடன் பங்குதாரர்கள்

இமுச திறனை அதிகரிக்கவும், பாடசாலையைவிட்டு விலகியவர்கள் தங்களுடைய தொழில் பாதையை கண்டுபிடிப்பதற்கு உதவுவதற்கும் தேபகைபஅ உடன் பங்குதாரர்கள்

தொழிற்சாலைகளுக்கு தொழில்நுட்பத் திறன் மட்டத்தில் ஒரு காலகட்டத்திற்கு மேல் மனித மூலதன பற்றாக்குறை ஒரு சவாலாக இருப்பதால் அதனை நிவர்த்தி செய்வதற்கு இலங்கை முதலீட்டுச் சபை (இமுச) தேசிய பயிலுனர் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை (தேபகைபஅ) உடன் ஒத்துழைக்கிறது.

ஹொரண ஏற்றுமதி செயலாக்க வலயங்களிலுள்ள தொழில் முயற்சிகள் (ஹொஏசெவ) தொழிற்சாலைகள் இயக்குவதற்கு மின்சாரம் சம்பந்தமான வேலை செய்வோர், காய்ச்சி இணைப்புவேலை செய்வோர், குழாய் வேலை செய்வோர் மற்றும் பொருத்துபவர்களின் பற்றாக்குறையை எதிர்கொண்டன. இது இமுச யை தேபகைபஅ உடன் அணிசேர்வதற்கு ஊக்குவித்து, படைஅணியின் பற்றாக்குறையை குறைப்பதற்காக தேவையான திறன், நிபுணத்துவம் மற்றும் பாடசாலையை விட்டு விலகியவர்களுக்கு பயிற்சி அளித்தல் என்பவற்றை வழங்குவதற்கு தேபகைபஅ சம்மதித்துள்ளது.

அதற்கு மேலாக தொழில்முயற்சிகளின் தேவைக்கு ஏற்ப பயிற்சி முடிவடைந்ததும் வேலை கற்றுக்கொள்பவர்கள் பொருத்தமான கம்பனிகளிலும், தொழிற்சாலைகளிலும் உள்வாங்கப்படுவார்கள்.



வலுவூட்டல்

ஊழியர்களுக்கு வலுவூட்டல்

இமுச தொழில்முயற்சிகளிலுள்ள ஊழியர்களுக்கு வலுவூட்டும் நடவடிக்கையாக இமுசவானது இமுச தொழில் முயற்சிகளிலுள்ள ஊழியர்களின் பங்களிப்புடன் பெண்கள் தினம், பாதுகாப்பு வாரம் மைல்கற்கள் நிகழ்வுகள் போன்றவற்றைக் கொண்டாடுகிறது.



வேலை விழிப்புணர்வு

முகப்பாடு (Orientation) நிகழ்ச்சிகளும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும்

இமுச, கைத்தொழில் உறவுகள் அலகுகள், ஏற்றுமதி செயலாக்க வலயங்களில் அமைந்துள்ள வேலை வங்கிகள் என்பன புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களுக்கு முகப்பாடு நிகழ்சிகளையும், சமூக உரையாடல், வேலைத் தளத்தில் ஒத்துழைப்பு, மாண்புடனான வேலை செயல்முறைகள், சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு போன்றவை பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சிகளையும் பொருத்தமான அரச முகவர்களுடன் இணைந்து தொடர்ந்து நடத்திவருகின்றன.



இமுச வேலை வங்கி

வேலை வங்கி இணைய முகப்பு

இமுச இன் வேலை வாய்ப்பு மையம் (வேலை வங்கி இமுச தொழில்முயற்சகளின் மனித சக்தி தேவையை நிறைவேற்றுகின்ற ஒரு மகத்தான சேவையை வழங்கி வருகிறது.

சகல செயலாக்க வலயங்களிலும் வேலை வங்கிகள் அமைந்துள்ளன. வலய வேலை வங்கிகளுடன், ஏற்றுமதி செயலாக்க வலயங்களுக்குள்ளும், வெளியேயும் அமைந்துள்ள இமுச தொழில்முயற்சிகளில் கிடைக்கும் வேலை வாய்ப்புக்களைப் பொதுமக்களுக்குத் தெரிவிக்கும் முகமாக ஒரு இலவச சேவையாக இமுச நிகழ்நிலை வேலை வங்கி இணைய முகப்பு ஒன்றினை ஆரம்பித்துள்ளது.



தொழில் வழிகாட்டுதல்

தொழில்கண்காட்சிகள்/ இளைஞர்களுக்கு தொழில் வழிகாட்டல் கருத்தரங்குகள்

இமுச தொழில்முயற்சிகளில் வேலை வாய்ப்புக்களுக்காக அதிகளவிலான வேலை தேடுவோரையும், பாடசாலையை விட்டு விலகும் சனத்தொகையையும் கவருவதற்காகவும், தொழில் வழிகாட்டி நிகழ்ச்சி மூலம் அவர்களை ஒரு சரியான தொழிற் பாதைக்கு வழிநடத்துவதற்காகவும் ஏனைய பொருத்தமான முகவர்களுடன் இணைந்து தொழில் கண்காட்சிகள்/தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகளை ஒழுங்குபடுத்துவதற்கு இமுச வசதியளித்துள்ளது.



பகற்காப்பு நிலையங்கள்

பகற்காப்பு நிலையங்கள் மற்றும் முன்பள்ளிகளை ஏற்றுமதி செயலாக்க வலயங்களுக்குள் தாபிப்பது, தங்களுடைய குழந்தைகளை வலயங்களுக்குள் பாதுகாப்பான இடங்களில் தங்கவிட்டு, தங்களுடைய வேலைகளைத் தொடர விரும்பும் ஊழியர்களுக்கு ஒரு உறுதியான தீர்வை வழங்குவதாக உள்ளது. இது உயர்ந்த அளவிலான தொழில் பிறழ்வைக் குறைப்பதற்கான தீர்வை வழங்குவதாகவும், புதிதாகச் சேர்ந்து கொள்கின்றவர்களுக்கு வலயங்களைப் பற்றி கவரக்கூடிய அபிப்பிராயத்தை ஏற்படுத்துவதாகவும் உள்ளன.


நிதிசார் மீளாய்வு - 2022

டிஸம்பர் 31 முடிடைந்த ஆண்டுக்கான நிதிசார் செயற்பாடுகள்	2022 (ரூபா மிலி.)	2021 (ரூபா மிலி.)	மாற்றம் (%)
வருமானம்	5,973	4,911	22
மொத்த செயற்பாட்டு செலவுகள்	(4,075)	(3,788)	(8)
செயற்பாட்டு இலாபம்	1,889	1,123	69
நிதி வரவு	1,402	330	325
நிதி செலவு	(7)	(10)	30
வரிக்கு முன்னரான மிகை	**3,294**	**1,443**	**128**
வரி செலவுகள்	(372)	(79)	(371)
வரிக்குப் பின்னரான மிகை	2,922	1,364	114
ஏனைய விரிவான வரவு	(6)	81	(107)
மொத்த விரிவான வரவு	2,916	1,445	102
வருட முடிவில் நிதி நிலமை			
சொத்துக்கள்	68,662	64,533	6
ஒப்புரவு	50,691	47,391	7

மிகை

மீளாய்வுக்கான ஆண்டில் வரிக்கு முன்னரான மிகை ரூபா 3,293.71 மிலி. ஆகும். முடிந்த ஆண்டுக்கான வரிக்குப் பின்னரான தேறிய மிகை 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,363.41 பிலி. இலிருந்து ரூபா 2,921.66 மிலி ஆக அதிகரித்துள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 114% அதிகரிப்பாகும்.


இரு மிலி



வருவாய்

மொத்த செயற்பாட்டு வருவாய் 22% அதிகரிப்பைப் பதிவுசெய்து, 2021 இல் ரூபா 4,911.18 மிலி. இலிருந்து ரூபா 5,973.23 மிலி. ஆக அதிகரித்துள்ளது. வருவாயில் இந்த அதிகரிப்பானது பிரதானமாக வீத மாற்றம் மற்றும் ஐஅ டொலருக்கு எதிராக ரூபாவின் மதிப்பு இறக்கமுமாகும். மொத்த வருவாயின் கூறுகள் "செயற்பாட்டு அடிப்படையில்" மற்றும் "செயற்பாடு அல்லாத அடிப்படையிலான" விடயங்களைக் கொண்டுள்ளது. செயற்பாட்டு அடிப்படையிலான வருவாயானது நில வாடகை, வருடாந்தக் கட்டணங்கள், இறக்குமதி/ஏற்றுமதி சேவை கட்டணங்கள், நீர் வருமானம். உத்தரவுப் பத்திர கட்டணங்கள், ஒப்பந்த செயற்பாட்டு கட்டணங்கள் மற்றும் நானாவித வருமானங்கள் என்பவற்றைக் கொண்டுள்ளது. செயற்பாடு அல்லாத அடிப்படையிலான வருமானமானது பிரதானமாக வட்டி வருமானத்தில் இருந்தாகும். இந்தக் காலத்திற்கான வட்டி வருமானம் ரூபா 1072.25 மிலி ஆல் அதிகரித்துள்ளது. இதனை 2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது இது 325% அதிகரிப்பாகும். இந்த சாதகமான மாறுபாடானது முதலீட்டு இலாகாவிற்கு (Portfolio) எதிராக அரச பிணைகளின் வட்டிவீத அதிகரிப்பென்று பதியப் பட்டுள்ளது. இந்தக் காலத்திற்கான வட்டி வருமானம் ரூபா 1,402.02 மிலி. ஆகும்.


இரு மிலி



செலவினம்

மொத்த செயற்பாட்டு செலவினம் 2021 இல் ரூபா 3,788.18 மிலி. இலிருந்து 2022 இல் 8% இனால் அதிகரித்து ரூபா 4,074.63 மிலி. ஆகியது. நிர்வாகச் செலவுகள் பிரதானமாக தனிப்பட்ட செலவுகள், பணியாளர் நலன்புரி மற்றும் போக்குவரத்து சம்பந்தமான செலவுகள் அதிகரிப்பு காரணமாக 6% இனால் அதிகரித்துள்ளது.


இரு மிலி



அரச அறவீடுகள்

மீளாய்வுக்கான ஆண்டில் வட்டிக்கு முன்னரான மிகை ரூபா 3,293.71 மிலி. ஆகும். இந்த ஆண்டில் வரிக்குப் பின்னரான தேறிய மிகை 2021 ஆம் ஆண்டில் ரூபா 1,363.41 மிலி ஆக இருந்ததிலிருந்து ரூபா 2,912.66 மிலி. ஆக அதிகரித்துள்ளது. இது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது 114% அதிகரிப்பாகும்.

இரு மிலி



இலங்கை முதலீட்டுச் சபை
2013 முதல் 2022 வரை வருமானக் கூற்றின் பகுப்பாய்வு

நிதிசார் ஆண்டு	2013	2014	2015	2016	2017	2018	2019	2020	2021	2022
வருமானம்	**2,721,805,586**	**3,100,162,918**	**3,213,557,727**	**3,605,145,347**	**3,711,862,608.00**	**3,889,614,384**	**4,646,091,668.00**	**4,251,299,069**	**4,911,181,363**	**5,973,226,716**
கழிக்க: செலவினங்கள்										
தொழிற்பாட்டு செலவினங்கள்	337,008,595	299,383,652	276,739,350	265,978,777	265,378,860.00	267,056,012	322,000,510	273,552,379	286,687,112	327,676,479
நிர்வாகச் செலவினங்கள்	1,981,947,246	2,301,683,057	2,488,716,775	2,639,675,029	2,724,737,397.00	2,846,961,666	3,165,507,063	3,192,487,029	3,344,826,022	3,536,143,256
அரச அறவீடுகள்	148,120,375	161,676,718	121,148,196	116,511,263	190,599,853.00	230,591,904	254,568,577	88,787,598	98,955,130	179,015,723
ஏனைய செலவினங்கள்	26,300,318	25,419,143	26,390,038	26,528,404	29,943,193.00	30,301,326	31,290,987	36,038,612	57,713,652	31,799,404
மொத்த செலவினங்கள்	**2,493,376,534**	**2,788,162,570**	**2,912,994,359**	**3,048,693,473**	**3,210,659,303**	**3,374,910,907**	**3,773,367,137**	**3,590,865,618**	**3,788,181,916**	**4,074,634,862**
தொழிற்பாட்டு செயற்பாடுகளின் பெறுபேறுகள்	**228,429,052**	**312,000,348**	**300,563,368**	**556,451,874**	**501,203,305**	**514,703,477**	**872,724,531**	**660,433,450**	**1,122,999,447**	**1,898,591,854**
நிதி வருமானம்	100,765,279	135,105,411	118,628,543	222,265,759	336,920,319.00	344,450,042	411,444,914	321,579,138	329,766,108	1,402,022,856
நிதி செலவினங்கள்	15,646,075	14,534,281	12,025,173	10,588,937	10,940,559.00	7,737,398	10,657,560	13,873,362	10,216,636	6,900,963
தேறிய நிதி வருமானம்	**85,119,204**	**120,571,130**	**106,603,370**	**211,676,822**	**325,979,760**	**336,712,644**	**400,787,354**	**307,705,775**	**319,549,472**	**1,395,121,893**
வரிக்கு முன்னரான மிகை	**313,548,256**	**432,571,478**	**407,166,738**	**768,128,696**	**827,183,067**	**851,416,121**	**1,273,511,885**	**968,139,226**	**1,442,548,919**	**3,293,713,748**
வரிச் செலவினங்கள்	22,627,258	30,786,759	26,031,646	47,342,329	70,759,017.00	92,323,030	115,204,576	81,246,467	79,143,866	372,056,361
ஆண்டுக்கான மிகை	**290,920,998**	**401,784,719**	**381,135,092**	**720,786,367**	**756,424,050**	**759,093,091**	**1,158,307,309**	**886,892,759**	**1,363,405,053**	**2,921,657,387**
ஏனைய விளக்கமான வருமானம்										
பொறுப்பு மீதான ஆயுட்கணக்கர் (இலாபம்)/இழப்பு	6,283,354	28,339,987	(29,335,586)	(14,247,556)	25,054,316.00	10,973,058	51,499,585	75,380,123	(81,555,310)	(5,809,848)
மொத்த விளக்கமான வருமானம்	**284,637,644**	**373,444,732**	**410,470,678**	**735,033,923**	**731,369,734**	**748,120,033**	**1,106,807,724**	**811,512,636**	**1,444,960,363**	**2,915,847,539**

நிதிசார் கூற்றுக்கள்

(2022 ஆம் ஆண்டு டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த வருடத்திற்கானது)

இலங்கை முதலீட்டுச் சபை

வருமானக் கூற்று

டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது	**குறிப்பு**	**2022** **ரூபா**	**2021** **ரூபா**
வருமானம்	**4**	**5,973,226,716**	**4,911,181,363**
கழிக்க: செலவினங்கள்			
தொழிற்பாட்டு செலவினங்கள்	**6**	327,676,479	286,687,112
நிர்வாகச் செலவினங்கள்	**7**	3,536,143,256	3,344,826,022
அரச அறவீடுகள்	**8**	179,015,723	98,955,130
ஏனைய செலவினங்கள்	**9**	31,799,404	57,713,652
மொத்த தொழிற்பாட்டு செலவினங்கள்		4,074,634,862	3,788,181,916
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான மிகை	**பெறுபேறு**	**1,898,591,854**	**1,122,999,447**
நிதி வருமானம்		1,402,022,856	329,766,108
நிதி செலவினங்கள்		6,900,963	10,216,636
தேறிய நிதி வருமானம்	**10**	**1,395,121,893**	**319,549,472**
வரிக்கு முன்னரான மிகை		**3,293,713,748**	**1,442,548,920**
வரிச் செலவினங்கள்		372,056,361	79,143,866
ஆண்டுக்கான மிகை		**2,921,657,387**	**1,363,405,054**

இலங்கை முதலீட்டுச் சபை

விளக்கமான வருமானக் கூற்று

டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது	குறிப்பு	2022 ரூபா	2021 ரூபா
ஆண்டுக்கான மிகை		**2,921,657,387**	**1,363,405,054**
ஏனைய விளக்கமான வருமானம்			
கழிக்க: வரையறுத்த பயன்பாட்டு திட்டம் ஆயுட்கணக்கர் (இலாபம்)/நட்டம்	**21.1**	(5,809,848)	81,555,310
ஆண்டுக்கான மொத்த விளக்கமான வருமானம்		**2,915,847,539**	**1,444,960,364**

பக்கம் 37 - 60 வரை தயாரிக்கப்பட்டுள்ள "நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்" நிதிக் கூற்றுகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

இலங்கை முதலீட்டுச் சபை
நிதிசார் நிலைமை கூற்று
டிஸம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு

	குறிப்பு	2022 ரூபா	2021 ரூபா
சொத்துக்கள்			
நடைமுறை அல்லாத சொத்துக்கள்			
ஆதனம், பொறித்தொகுதி, சாதனம்	11	16,590,833,444	16,447,957,171
முதலீட்டு ஆதனம்	12	39,509,893,878	38,874,669,885
தொட்டுணர முடியாத சொத்துகள் - மென்பொருள்		1,202,500	1,267,500
தற்போதுள்ள மூலதன நடைமுறை வேலை	13	663,949,641	1,164,136,045
நிதிசார் சொத்துக்கள்	14	1,836,212,997	1,031,956,017
மொத்த நடைமுறை அல்லாத சொத்துக்கள்		**58,602,092,461**	**57,519,986,618**
நடைமுறைச் சொத்துக்கள்			
பதிவேட்டுப் பொருட்கள்		19,624,040	16,504,778
நிதிசார் சொத்துக்கள்	15	6,642,855,587	199,851,910
தொழில்முயற்சிகளிலிருந்து கிடைக்கவேண்டியவை	16	514,554,207	318,462,069
முற்கொடுப்பனவுகளும், கிடைக்கவேண்டிய ஏனையவையும்	17	713,888,827	529,944,140
காசும், காசுக்கு சமமானவையும்	18	2,169,387,636	5,948,317,760
மொத்த நடைமுறைச் சொத்துக்கள்		**10,060,310,297**	**7,013,080,657**
மொத்த சொத்துக்கள்		**68,662,402,758**	**64,533,067,275**
ஒப்புரவும் பொறுப்புக்களும்			
ஒப்புரவு			
திரண்ட நிதியம்		35,350,600,314	32,050,723,381
ஒதுக்கங்கள்		15,340,693,234	15,340,693,234
		50,691,293,548	**47,391,416,615**
ஒத்திவைக்கப்பட்ட வருமானம்	20	16,281,302,053	15,821,737,118
ஒத்திவைக்கப்பட்ட செலவினம்	19	(485,280,787)	(428,295,356)
		15,796,021,266	**15,393,441,762**
மொத்த ஒப்புரவு		**66,487,314,814**	**62,784,858,377**
நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்			
ஓய்வூதிய பிரதிலாப கடப்பாடுகள்	21	306,570,548	278,808,543
நடைமுறை அல்லாத நிதிப் பொறுப்புக்கள்	22	13,375,247	34,512,895
மொத்த நடைமுறை அல்லாத பொறுப்புக்கள்		**319,945,795**	**313,321,438**
நடைமுறைப் பொறுப்புக்கள்			
நடைமுறை நிதிப் பொறுப்புக்கள்	22	21,137,648	24,456,313
திரண்ட செலவினங்களும் செலுத்தவேண்டிய ஏனையவையு	23	1,647,784,849	1,386,146,594
செலுத்தவேண்டிய வரி		186,219,651	24,284,555
மொத்த நடைமுறைப் பொறுப்புக்கள்		**1,855,142,149**	**1,434,887,461**
மொத்த ஒப்புரவும் பொறுப்புக்களும்		**68,662,402,758**	**64,533,067,276**

பக்கம் 37 - 60 வரை தயாரிக்கப்பட்டுள்ள "நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்" நிதிக் கூற்றுகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

இந்த நிதிக் கூற்று தயாரித்தலும், சமர்ப்பிப்பதும் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும்.
இலங்கை முதலீட்டு சபையின் பணிப்பாளர் சபைக்காகவும், அதன் சார்பாகவும் அங்கீகரித்து, ஒப்பமிடப்பட்டுள்ளது.

தினேஷ் வீரக்கொடி	ஜயமின் பெல்பொல	ரேணுகா எம். வீரக்கோன்	எஸ்.ஏ.டீ.டீ.சுரவீர
தலைவர்	சபை அங்கத்தவர்	பணிப்பாளர் நாயகம் (பதில்)	நிறைவேற்று பணிப்பாளர்-நிதி

26/07/2023

இலங்கை முதலீட்டுச் சபை

ஒப்புரவிலுள்ள மாற்றங்கள் பற்றிய கூற்று

2022 டிஸம்பர் 31 ஆம் திகதியன்றுள்ளவாறு

	திரண்ட நிதியம் ரூபா	மீள் மதிப்பீட்டு ஒதுக்கீடு ரூபா	மொத்த ஒப்புரவு ரூபா
2021 ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி	**20,911,194,024**	**15,340,693,234.00**	**36,251,887,258**
ஆண்டுக்கான மொத்த விளக்கமான வருமானம்	1,444,960,364	-	1,444,960,364
திரட்டிய நிதிக்கான பங்களிப்பு - ரூபா 500 மிலி			
2021 ஆம் ஆண்டில் பங்கு இலாப கொடுப்பனவு	**(415,945,716)**		(415,945,716)
2021 ஆம் ஆண்டில் கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளங்களும் படிகளும் அறவிடல்	**(21,068,786)**		(21,068,786)
2022 இல் பணியாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட சம்பளங்களும் படிகளும் அறவிடல் - திறைசேரியிலிருந்து கிடைக்கவேண்டியவை	**(51,492,525)**		(51,492,525)
வாடகை மற்றும் ஏனையவை மீதான வாடகை அறவிடலின் தாக்கம் ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டவை	**(11,492,973)**		(11,492,973)
வருமானம் சீராக்கல்கள் நேரடியாக ஒப்புரவிலிருந்து அடையாளம் காணப்பட்டவை - விலைப்பட்டியல் ரத்து 2020	(3,904,116)	-	(3,904,116)
ஒப்புரவு மூலம் கணக்கியல் முறையில் மாற்றம் காரணமாக வருமானம் அடையாளம் காணல் வஏசெவ வீடமைப்புத் திட்டம்	1,149,000	-	1,149,000
வாடகை வருமானம் அடையாளம் காணல் - 2020 ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணபபட்டது	14,024,450	-	14,024,450
திறைசேரிககான கொடுக்கல் வாங்கல்கள் - உட்கட்டமைப்பு அபிவிருத்தி திட்டங்கள்	(25,584,946)	-	(25,584,946)
சொத்துகளை அடையாளம் காணல் நேரடியமாக ஒபபுரவு மூலம்	3,278,034	-	3,278,034
காணி கட்டுப்பணம் வருமானம் நேரடியாக ஒப்புரவு மூலம் மீள எழுதப்பட்டது	(35,093,432)	-	(35,093,432)
அரச கொடை - காணி நேரடியாக ஒப்புரவு மூலம் அடையாளம் காணப்பட்டது- அரபொக்க காணி	10,240,700,000	-	10,240,700,000
2021 டிஸம்பர் 31ஆம் திகதியன்று மீதி	**32,050,723,378**	**15,340,693,234**	**47,391,416,612**
2022 ஜனவரி 1 ஆம் திகதியன்று மீதி	**32,050,723,378**	**15,340,693,234**	**47,391,416,612**
ஆண்டுக்கான மொத்த விளக்கமான வருமானம்	2,915,847,539	-	2,915,847,539
திரட்டிய நிதிக்கான பங்களிப்பு/பங்கு இலாபம் செலுத்த வேண்டியது 1	(500,000,000)	-	(500,000,000)
சொத்துகளை அடையாளம் காணல் நேரடியமாக ஒபபுரவு மூலம் 2	599,057,567	-	599,057,567
சொத்துகளை அடையாளம் காணப்படாதது நேரடியமாக ஒபபுரவு மூலம் 3	(486,100)		(486,100)
இரத்துச் செய்யப்பட்ட திட்டங்களின் காணி கட்டுப்பணம் ஒப்புரவு மூலம் வருமானமாக அடையாளம் காணல் 4	156,751,776		156,751,776
நில வாடகை அடையாளம் காணல் நேரடியாக ஒப்புரவு மூலம் அடையாளம் காணப்பட்டது 5	23,684,671		23,684,671
காணி ஒதுக்கீட்டுக் கட்டணம் ஒப்புரவு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டது 6	105,014,515		105,014,515
2015 ஆம் ஆண்டுக்கான செலவினத்தை அடையாளம் காணல் நேரடியாக ஒப்புரவு மூலம் 7	(155,947)		(155,947)
ஆரம்பகாலத்தில் அடையாளம் காணப்பட்ட செலவினத்தில் தாகக்கம் நேரடியாக ஒப்புரவு மூலம் 8	162,916		162,916
2022 டிஸம்பர் 31ஆம் திகதியன்று மீதி	**35,350,600,314**	**15,340,693,234**	**50,691,293,548**

பக்கம் 37 - 60 வரை தயாரிக்கப்பட்டுள்ள "நிதிக் கூற்றுகளுக்கான குறிப்புக்கள்" நிதிக் கூற்றுகளின் ஒருங்கிணைந்த பகுதியாகும்.

1.அரச உடமை தொழில்முயற்சிகளுக்கு பொருந்தக்கூடிய பங்கு இலாப கொள்கைக்கு இணங்க சபை ரூபா 500 மிலி. ஐ பங்கு இலாபமாக திறைசேரிக்கு ஒதுக்கியுள்ளது

2. நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் சேர்த்துக்கொள்ளப்படாத சொத்துக்கள் ஒப்புரவு கணக்கு மூலம் நேரடியாக அடையாளம் காணப்பட்டுள்ளன. (வலயம் அல்லாத காணிகளும், கட்டடங்களும்)

3.1 ஏகல இல் உள்ள டெலிகொம் என்ற காணி உரிமையை இமுச தேநீவவச க்கு மாற்றியுள்ளது

3.2 செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கு அல்லது குறைவாகப் பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கு புத்துயிர் அளித்தல் சட்டத்தின் கீழ் றுகுணுபுத்தா ஏப்பரல்ஸ் (தனி) லிமி. இனால் ஆக்கிரமிக்கப்பட்ட காணி கையகப்படுத்தப்பட்டது.

4. காணி கட்டுப்பண வருமானத்தில் இரத்துச் செய்யப்பட்ட திட்டங்களின் வருமான தாக்கம் மீதான அடையாளம் காணல்

5 முன்னைய அண்டுகளில் நில வாடகை வருமானத்தில் வருமான தாக்கம் மீதான அடையாளம் காணல்

6. செயற்படாத திட்டங்களின் காணி ஒதுக்கீட்டு கட்டணத்திலிருந்தான வருமான அடையாளம் காணலின் தாக்கம்

7. 2015 ஆம் ஆண்டுக்கான செலவினம் அடையாளம் காணல் - முன்னைநாள் பணிப்பாளர் நாயகத்தின் சம்பளம்

8. ஆரம்பகாலத்தில் அடையாளம் காணப்பட்ட செலவினத்தின் தாக்கம் - கழிவுநீர் சுத்திகரிப்பு பொறித்தொகுதி வஏசெவ

இலங்கை முதலீட்டுச் சபை

காசுப் பாய்ச்சல் கூற்று

டிஸம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த ஆண்டுக்கானது	2022 ரூபா(மிலி)	2021 ரூபா(மிலி)
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்		
தொழிற்பாடுகளிலிருந்து பெறப்பட்ட காசு (குறிப்பு 24)	**(3,956.53)**	**1,633.22**
செலுத்தப்பட்ட வருமான வரி	(210.12)	(66.41)
ஓய்வூதிய பிரதிலாப கடப்பாட்டிற்கான கொடுப்பனவு	(69.41)	(53.69)
கிடைக்கப்பெற்ற தள்ளிவைக்கப்பட்ட வருமானம்	945.06	343.57
கிடைக்கப்பெற்ற கட்டட கட்டுப்பணம்	-	40.70
காசு மீளளிப்பு	(29.68)	-
தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல்கள் / (வெளிப் பாய்ச்சல்கள்)	**(3,320.68)**	**1,897.39**
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்		
கிடைக்கப்பெற்ற முதலீட்டு வருமானம்	1,131.72	296.98
அரச பிணைகளில் முதலீடு	(730.65)	(457.94)
நிலையான சொத்துக்கள் கொள்வனவு	(35.64)	(36.82)
தொட்டுணரமுடியாத சொத்துக்கள் கொள்வனவு	-	(1.30)
நிலையான சொத்துக்கள் விற்பனையிலிருந்து வரும்படி	2.20	0.32
நிலையான சொத்துக்கள் விற்பனையின்போது ஏற்பட்ட செலவினங்கள்	-	(0.89)
மூலதன நடைமுறை வேலை	(376.24)	(448.94)
தள்ளிவைக்கப்பட்ட செலவு	(3.17)	(6.24)
உட்கட்டமைப்பு மெகா திட்டங்களுக்கு வசதியளித்தல்	-	(0.06)
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசு உட்பாய்ச்சல்கள் / (வெளிப் பாய்ச்சல்கள்)	**(11.78)**	**(654.89)**
நிதிசார் நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்கள்		
செலுத்தப்பட்ட குத்தகை தவணைப்பணம்	(30.53)	(39.30)
திறைசேரிக்கு நிதி மாற்றம்	(415.95)	-
நிதிசார் நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்கள் / (வெளிப் பாய்ச்சல்கள்)	**(446.47)**	**(39.30)**
காசும், காசுக்கு சமமானவற்றிலும் தேறிய அதிகரிப்பு/(குறைவு)	(3,778.93)	1,203.20
வருட ஆரம்பத்தில் காசும், காசுக்கு சமமானவையும்	5,948.32	4,745.11
வருட இறுதியிவ் காசும், காசுக்கு சமமானவையும்	**2,169.39**	**5,948.31**

இலங்கை முதலீட்டுச் சபை

நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

1. அறிக்கைப்படுத்தும் நிறுவனம்

இலங்கை முதலீட்டுச் சபை, இலங்கை முதலீட்டுச் சபைச் சட்டம் 1978 இன் இல. 4 இன் கீழ் ஸ்தாபிக்கப்பட்டது. இந்த நிறுவனத்தின் பதிவு அலுவலகமும், பிரதான இடமும் மேற்குக் கோபுரம், உவமை (WTC), எசிலன் சதுக்கம், கொழும்பு 1 இல் அமைந்துள்ளது.

2. தயாரித்தலுக்கான அடிப்படைகள்

2.1 இணக்கக் கூற்று

சர்வதேச கணக்கீட்டுத் தரச் சபையினால் வழங்கப்பட்ட சர்வதேச நிதி அறிக்கைப்படுத்தல் தரத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்தும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட இலங்கைக் கணக்கீட்டுத் தரங்களுக்கு (SLFRS/LKAS) அமைய நிதி நிலைமைக் கூற்று, விரிவான வருமானம், ஒப்புரவில் மாற்றங்கள், காசுப் பாய்ச்சல் மற்றும் குறிப்புக்கள், சபையின் குறிப்பிடப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளின் சுருக்கத்துடன் சேர்த்துத் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.2 மதிப்பீடுகள், நியாயப்படுத்துதல் மற்றும் ஊகங்களை உபயோகித்தல்

சபையின் நிதிசார் கூற்று தயாரிக்கப்படும்போது வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் மற்றும் அசாதாரண பொறுப்புக்களை வெளிப்படுத்துதல் என்பவற்றில் அந்த அறிக்கையிடப்பட்ட திகதியில் அறிக்கையிடப்பட்ட தொகையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றவற்றிற்கு முகாமைத்துவம் நியாயப்படுத்துதல், மதிப்பிடுதல் மற்றும் ஊகங்களை மேற்கொள்ள வேண்டும். இந்த மதிப்பீடுகளும், அடிப்படை ஊகங்களும் தொடர்ந்து மீளாய்வு செய்யப்படுகின்றன. எவ்வாறாயினும், இந்த ஊகங்களும், மதிப்பீடுகளும் நிச்சயமில்லாததால் எதிர்காலத்தில் பாதிக்கப்பட்ட சொத்துக்களில் அல்லது பொறுப்புக்களில் கொண்டுசெல்லப்பட்ட தொகையில் பொருள் சீராக்கல் மேற்கொள்ளவேண்டிய தேவை எற்படலாம்.

2.3 நிதிசார் கூற்றுக்களின் ஒப்புதல்

2022 டிஸம்பர் 31 அன்று முடிவடைந்த வருடத்திற்கான சபையின் நிதிசார் கூற்றுக்கள் 2023 ஆம் ஆண்டு ஜூலைமாதம் 26 ஆம் திகதி இடம்பெற்ற சபைக் கூட்ட அறிக்கைக்கு அமைய பணிப்பாளர் சபையினால் ஒப்புதல் வழங்கப்பட்டு, வெளியிடுவதற்கான அதிகாரமும் வழங்கப்பட்டது.

2.4 ஒப்பீட்டுத் தகவல்

சம காலத்து நிதிசார் கூற்றுக்களை மேலும் புரிந்துகொள்வதை அதிகரிப்பதற்காகவும், இடைப்பட்ட காலத்துடன் ஒப்பிடுவதற்காகவும் நிதிசார் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுதலை அதிகரிப்பதற்காகவும் ஒப்பபீட்டுத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது. தேவையான இடங்களில் சிறந்த விளக்கத்தை வழங்குவதற்காக இந்த வருட வகைப்படுத்தலுடன் இணங்குவதற்காக ஒப்பீட்டுத் தகவல் மீள்வகைப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

2.5 தொடர்ந்து இயங்கிவரும் நிறுவனம்

நிதிசார் கூற்றைத் தயாரிக்கும்போது சபை தொடர்ந்தும் இயங்குகின்ற ஒரு நிறுவனமாக இருக்கின்ற வல்லமை கொண்டதாக இருப்பதாக முகாமைத்துவம் மதிப்பீடு செய்துள்ளது. சபை தொடர்ந்தும் செயற்பாட்டு நடவடிக்கைகளைத் தொடர்வதற்குப் போதுமான வளங்கள் எதிர்பார்க்கக்கூடிய எதிர்காலத்திற்கு சபையிடம் உள்ளதென்ற நியாயமான எதிர்பார்ப்பைக் கொண்டுள்ளது. எதிர்காலத்தையிட்டு கிடைத்த தகவல்கள் அனைத்தையும் கருத்தில் கொள்ளும்போது ஒழிக்கவேண்டிய அல்லது செயற்பாடுகளை நிறுத்தவேண்டிய தேவை எதனையும் சபை எதிர்பார்க்கவில்லை. அதற்கேற்ப சபை தொடர்ந்து இயங்கிவரும் நிறுவனம் என்ற அடிப்படையில் நிதிசார் கூற்றுக்களைத் தயாரிக்கிறது.

2.6 பாவனையிலுள்ள மற்றும் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நாணயம்

சபையின் பாவனையிலுள்ள நிதி இலங்கை ரூபாவாகத் தீர்மானிக்கப்பட்டதுடன், நிதிசார் கூற்றுக்களும் இலங்கை ரூபாவில் தயாரிக்கப்பட்டுள்ளன.

3 குறிப்பிடப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள்

3.1 நிதிச் சொத்துக்கள்

சபை அதன் நிதிச் சொத்துக்களை கடன்கள் மற்றும் கிடைக்கவேண்டியவையென வகைப்படுத்தியதுடன் நிதிச் சொத்துக்கள் முதலீட்டில் நியாயமான பெறுமதியில் அளவிடப்பட்டுள்ளது. ஆரம்பத்தில் அடையாளம் காணப்பட்டபோது இந்த வகைப்படுத்தல் முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டதுடன், இந்த முதலீடு எந்தத் தேவைக்காக மேற்கொள்ளப்பட்டு, பெற்றுக்கொள்ளப்பட்டது என்பதுடன், அதன் ஒப்பந்த காசுப் பாய்ச்சல் குணாதிசயங்களிலும் தங்கியுள்ளது.

(அ) வகைப்படுத்தல்

(i) *<u>கடன்களும், கிடைக்கவேண்டியவையும்</u>*

கடன்களும், கிடைக்கவேண்டியவையும் ஒரு தீவிரமான சந்தையில் தெரிவிக்கப்படாத நிலையான அல்லது தீர்மானிக்கப்படும் கொடுப்பனவுடனான ஒரு மூலத்திலிருந்து பெறப்படாத நிதிச் சொத்துக்களாகும். பொதுவான கொடுக்கல் வாங்கல்களில் ஏற்படும் கிடைக்கவேண்டியவையும் இவ்வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதுடன், அவை இழப்பீடுகளுக்காக மீளாய்வு செய்யப்படுகின்றன.

(ii) *<u>நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்கள் - (முதிர்வடையும்வரை வைத்திருக்கும் நிதிச் சொத்துக்கள்)</u>*

நியாயமான பெறுமதியில் மதிப்பிடப்பட்ட நிதிச் சொத்துக்களாவன ஒரு மூலத்திலிருந்து பெறப்படாததும், நிலையான அல்லது தீர்மானிக்கக்கூடிய கொடுப்பனவுடனானதும், நிலையான முதிர்வுகாலத்தைக் கொண்டிருப்பதுடன், சபையின் முகாமைத்துவம் அவற்றை முதிர்வடையும்வரை வைத்திருக்கமுடியுமென்ற சார்பான நோக்கத்தையும், வல்லமையையும் கொண்டுள்ளவையாகும். இந்த நிதிச் சொத்துக்கள் அடையாளம் காணப்பட்டு, வருமானக் கூற்றில் நியாயமான பெறுமதியில் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

ஆ) இழப்பீடுகள்

எதிர்பார்க்கப்படும் கடன் இழப்பீடுகள் ஏதாவது இருக்கின்றனவாவென ஒவ்வொரு நிதிசார் நிலைமை கூற்று தினத்திலும் நிதிச் சொத்துக்கள் மீளாய்வு செய்யப்படும். அவ்வாறான அறிகுறி ஏதும் இருப்பின், சொத்தின் அறவிடப்படக்கூடிய தொகை மதிப்பிடப்படும். சபையானது எதிர்பார்க்கப்படும் கடன் இழப்புகளை நிதிசார் சொத்துக்களின் அனைத்து வகைகளிலும் ஒரு மதிப்பீட்டின் அடிப்படையில் அளவிடுகிறது. இந்த மதிப்பீடுகள் பணத்தின் நேர மதிப்பு, ஒப்பந்தத்தின் நிபந்தனையை மீறல், வாடிக்கையாளர் நிலைமை பகுப்பாய்வு, கிடைக்கவேண்டியவற்றின் உப குழு, கடன்படுனரின் கொடுப்பனவு விபரங்கள், இணை மதிப்புகள், கடன் ஆபத்தில் குறிப்பிடத்தக்க அளவு அதிகரிப்பு பற்றிய மதிப்பீடு, வாடிக்கையாளர்களின் நிதிச் சிரமங்கள், சட்டப் பிரச்சனை, நியாயமான மற்றும் ஆதரிக்கக்கூடிய தகவல் மற்றும் எதிர்கால பொருளாதார நிலைமை பற்றிய முன்னறிவிப்பு போன்ற பல்வேறு காரணிகளால் இயக்கப்படுகின்றன.

இழப்பீட்டு நட்டங்களானது சொத்தின் மேற்கொண்டுசெல்லும் அளவு அல்லது அதன் காசு உற்பத்தி செய்யும் அலகுகள் அதன் அறவிடப்படக்கூடிய தொகையைத் தாண்டிச் செல்லும்போது அடையாளம் காணப்படுகிறது. இழப்பீட்டு நட்டங்கள் வருமானக் கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

(இ) மீள் அடையாளம் காணல்

முன்னரான காலப்பகுதியில் அடையாளம் காணப்பட்ட இழப்பீட்டு நட்டங்கள் ஒவ்வொரு அறிக்கைப்படுத்தல் திகதியிலும் அவை குறைவடைந்துள்ளனவா அல்லது அகன்றுவிட்டனவா என்ற அறிகுறிகள் உள்ளதாவென மதிப்பிடப்படுகிறது. அறவிடப்படக்கூடிய தொகையைத் தீர்மானிப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட மதிப்பீடுகளில் ஏதாவது மாற்றம் இருப்பின், இழப்பீட்டு நட்டங்கள் மீள் அடையாளம் காணப்படும்.

3.2 ஆதனம், பொறித்தொகுதி மற்றம் சாதனம்

(அ) அடையாளம் காணுதலும், அளவீடும்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம் என்பன அதன் கிரயத்திலிருந்து திரண்ட தேய்மானம் மற்றும் ஏதாவது திரண்ட இழப்பீட்டு நட்டங்களைக் கழித்து காட்டப்பட்டுள்ளன. கிரயம், சொத்து கொள்வனவிற்கு நேரடியாகக் காட்டப்படக்கூடிய செலவினத்தை உள்ளடக்கியதாகும். சுயமாக அமைக்கப்பட்ட சொத்துக்களின் கிரயம் பொருட்களின் கிரயம், நேரடி உழைப்பு, மற்றும் அந்த சொத்து என்ன தேவைக்கானதோ அதனை இயங்கும் நிலைக்குக் கொண்டுவருவதற்கான ஏனைய நேரடியாகக் காட்டப்படக்கூடிய வேறு ஏதாவது கிரயங்கள், கழற்றுவதற்கான கிரயம், விடயங்களை அகற்றுவதற்கான கிரயங்கள், அவை அமைந்துள்ள தளத்தை மீட்டமைத்தல் என்பன அடங்கலாகும்.

மீள்மதிப்பீடு செய்யப்பட்ட சொத்துக்களுக்கு SLFRS 1 இன்படி, ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனம் என்பன மதிப்பீடு செய்யப்படும்போது அதன் மேற்கொண்டு செல்லப்பட்ட பெறுமதியில் 2011 ஜனவரி 01 ஆம் திகதியன்று திரண்ட தேய்மானத்தைக் கழித்து, வருகின்ற தொகையே 2011 ஜனவரி 01 ஆம் திகதியன்று கருதப்பட்ட கிரயமாகக் கருதப்பட்டுவருகிறது.

(ஆ) தேய்மானம்

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் சாதனத்தின் சகல விடயங்களுக்குமான தேய்மானம் கிரயம்/மதிப்பீடு நேர் கோட்டு முறைமையின் அடிப்படையில் கணிக்கப்பட்டு, வருமானக் கூற்றில் அடையாளம் காணப்படுகிறது. நிலையான சொத்துக்களுக்கான தேய்மானம் அவை பாவனைக்குக் கிடைக்கக்கூடியபோது, கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் அறவிடப்படுகிறது. ஆதனம், பொறித் தொகுதி மற்றும் சாதனம் என்பனவற்றிற்கு

வருடந்தோறும் அவற்றின் பயன்பாட்டுக் காலத்தில் தேய்மானம் மேற்கொள்ளப்படுகிறது. பராதீனப்படுத்தப்படாத காணிகளுக்கு தேய்மானம் மேறகொள்ளப்படுவதில்லை.

சொத்துக்களின் வகை	***வருடாந்த தேய்மான வீதம்***	***காலம் (ஆண்டுகள்)***
கட்டடங்களும் அமைப்புகளும்	5-10	10-20
பொறித்தொகுதி, இயந்திரங்கள்	10	10
இணைப்பும் பொருத்துதலும்	10	10
அலுவலக தளபாடமும்,உபகரணமும்	10	10
கணனிகள்	33.33	3
மோட்டார் வாகனங்கள்	20	5

(இ) மீள் அடையாளம் காணல்

ஆதனம் மற்றும் உபகரண விடயங்களின் மேற்கொண்டு செல்லும் தொகை அவை வெளியேற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்காலத்தில் எந்த பொருளாதார அனுகூலமும் எதிர்பார்க்கப்படாதவிடத்து, மீள் அடையாளம் காணப்படுகின்றன. சொத்து, பொறித் தொகுதி, சாதனம் ஒன்றினை மீள அடையாளம் காணுதலினால் ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் அதனை விற்று வரும் தொகைக்கும், அந்தச் சொத்தை மேற்கொண்டு செல்லும் தொகைக்குமிடையிலான வித்தியாசமாகத் தீர்மானிக்கப்படுவதுடன், இது வருமானக் கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளது. (“ஏனைய செயற்பாட்டு (நானாவித)/வருமானம்/செலவினம்” என்பதற்குள்)

(ஈ) அடுத்தடுத்த செலவினம்

ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனத்தின் விடயம் ஒன்றை மாற்றிடல், மேம்படுத்தல், மற்றும் அதன் பாகமொன்றை நிர்மாணித்தலுக்கான கிரயமானது அந்தப் பாகத்தில் அடங்கியுள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு உள்வருவதும், அந்தக் கிரயத்தை நம்பத்தகுந்த விதத்தில் அளவிடக்கூடியதுமாக இருப்பதும் சாத்தியமானால் அந்தத் தொகையை மேற்கொண்டு செல்வதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனத்தின் பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புக் கிரயங்கள் என்பன அவை ஏற்பட்டதாக வருமான மற்றும் ஏனைய விரிவான வருமான கூற்றில் அடையாளம் காணப்பட்டுள்ளன.

(உ) ஆதனம், பொறித்தொகுதி, சாதனம் என்பவற்றின் விற்பனையிலிருந்து இலாபம்/நட்டம்

ஆதனம், பொறித்தொகுதி, சாதனம் என்பவற்றை உபயோகிக்க முடியாதபோது அல்லது வெளியேற்றப்படும்போது ஏதாவது இலாபம் அல்லது நட்டம் அந்த விற்பனை நடந்த காலத்தில் அடையாளம் காணப்பட்டால் அவை ஏனைய செயற்பாட்டு வருமானம் அல்லது செலவினம் என்று வகைப்படுத்தப் பட்டுள்ளது.

(ஊ) தற்போதுள்ள மூலதன நடைமுறை வேலை

இவ்வாண்டில் நிதிசார் நிலைமைக் கூற்று தினத்தில் பூரணப்படுத்தப்படாத திட்டங்கள் மீதான மூலதன செலவினங்கள் தற்போதுள்ள மூலதன நடைமுறை வேலையாகக் காட்டப்பட்டுள்ளன. இவை கிரயத்திலிருந்து ஏதாவது திரண்ட இழப்பீட்டு நட்டங்களைக் கழித்துக் கூறப்பட்டுள்ளன. தற்போதுள்ள மூலதன நடைமுறை வேலைகள் ஆதனம், பொறித்தொகுதி மற்றும் சாதனத்துடன் மெகா திட்டங்களுக்காக ஏற்பட்ட

நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

தள்ளிப்போடப்பட்ட செலவினங்கள் மற்றும் ஏற்பட்ட செலவினங்கள் என்பன அமைவிடத்தில் இருக்கும்போதும், முகாமைத்துவத்தால் உத்தேசிக்கப்பட்ட முறையில் செயற்படுத்துவதற்கு வேண்டிய நிலையில் இருக்கும்போதும் தொடர்புடைய வகைகளுக்கு மாற்றப்பட்டுள்ளன.

(எ) குத்தகைச் சொத்துக்கள்

நிதிசார் பொறுப்புக்களின் கீழ் பெறப்பட்ட சொத்துக்கள் மூலதனமாக்கப்பட்டு, குத்தகைக்கு வழங்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் என்ற வகையின் கீழ் அதேயளவு நிதிசார் பொறுப்பாக அடையாளம் காணப்பட்டு, சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன. நிதிக் குத்தகையின் கீழுள்ள சொத்துக்கள் அவை பயன்படுத்தப்படும் காலம் பூராவும் தேய்மானத்திற்கு உட்படுத்தப்படுகின்றன.

(ஏ) *கட்டமைப்புக்கள்*

ஏழு பிரதான உப வகுதிகளின் கீழ் கட்டமைப்புகளின் நியாயமான பெறுமதிகள் மதிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு பிரதான உப வகுதியுடனும் தொடர்புபட்ட சகல விடயங்களும், அங்கங்களும் ஒரு அலகின் பகுதியாகுவதாகக் கருதப்படுகின்றன.

3.3

(அ) முதலீட்டு ஆதனங்கள்

முதலீட்டு ஆதனங்கள் குறிப்பிட்ட ஆதனங்களை வகைப்படுத்தும் தினத்தில் நடைமுறையிலுள்ள (கிரய மாதிரி) பெறுமதியில் முதலீட்டு ஆதனங்களின் கீழ் கிரயத்தில் காட்டப்பட்டுள்ளன.

முதலீட்டு ஆதனங்கள் தொடர்பான எதிர்கால பொருளாதார அனுகூலங்கள் சபைக்குக் கிடைக்கக்கூடியதானது சாத்தியமானாலும், கிரயமானது நம்பத்தகுந்த முறையில் அளவிடமுடியுமானதாக இருக்குமெனில் அத்தகையவை முதலீட்டு ஆதனங்களாக அடையாளம் காணப்படும். வாடகை வருமானத்தை உழைப்பதற்காக வைத்திருக்கும் ஆதனங்களானது முதலீட்டு ஆதனங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. பின்னர் முதலீட்டு வருமானங்களின் நியாயமான பெறுமதி அளவிடப்படவில்லை. அத்துடன் சில சொத்துக்கள் தவிர, முதலீட்டு ஆதனம் பற்றிய அங்கீகரிக்கப்பட்டதும், தொழில்துறை சார்ந்ததுமான தகைமையைக் கொண்ட சுயாதீனமான மதிப்பீட்டாளரினால் மதிப்பீடு மேற்கொள்ளப்படவில்லை.

முதலீட்டு ஆதுனங்கள் அவை வெளியேற்றப்படும்போது அல்லது முதலீட்டு ஆதனம் பாவனையிலிருந்து நிரந்தரமாக நீக்கப்படுவதுடன், அதனை நீக்குவதனால் எதிர்காலத்தில் பொருளாதார நன்மை எதுவும் எதிர்பார்க்காதவிடத்து, அவை இனங்காணப்படவில்லை.

(ஆ) தேய்மானம் (கடன்தீர் நிதி மூலமாக கடன் குறைப்பு)

காணி தவிர முதலீட்டுச் சொத்துக்களின் தேய்மானம் நேர்கோட்டு அடிப்படையில் கிரயம்/ முதலீட்டுச் சொத்துக்களின் மதிப்பீட்டில் கணிக்கப்படும். முதலீட்டுச் சொத்துக்களுக்கான தேய்மானம் வருடந்தோறும் வருமாறு அவற்றின் பயன்பாட்டுக் காலம் வரைக்கும் மேற்கொள்ளப்பட்டது.

சொத்துக்களின் வகை	**வருடாந்த தேய்மான வீதம்**	**காலப்பகுதி (ஆண்டுகள்)**
கட்டடங்கள்	5	20

3.4 தொட்டுணர முடியாத சொத்துக்கள்

(அ) அடையாளம் காணுதலும் அளவீடும்

குறிப்பிட்ட காலத்திற்கு உபயோகமான வாழ்வைக் கொண்டதும், சபையினால் பெற்றுக்கொண்டதுமான தொட்டுணர முடியாத சொத்துகள் அடையாளம் காணப்பட்டதுடன், திரண்ட கடன்தீர் நிதி மூலமாக கடன் குறைப்பு மற்றும் இழப்பீட்டு இழப்புகள் கழித்து கிரயத்தில் கொண்டுசெல்லப்பட்டுள்ளது.

(ஆ) கடன்தீர் நிதி மூலமாக கடன் குறைப்பு

கடன்தீர் நிதி மூலமாக கடன் குறைப்பு வருமானம் மற்றும் ஏனைய விளக்கமான வருமானக் கூற்றில் நேர்கோட்டு அடிப்படையில் தொட்டுணர முடியாத சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட உபயோகமான வாழ்வு வரைக்கும் அவை எப்போது பாவனைக்குக் கிடைக்கப்பெற்றதோ அத் தினத்திலிருந்து அடையாளம் காணப்படுகிறது.

சொத்துக்களின் வகை	**வருடாந்த தேய்மான வீதம்**	**காலப்பகுதி (ஆண்டுகள்)**
மென்பொருள் உத்தரவுப் பத்திரம் - கியோஸ்க்	5	20

(இ) அடுத்தடுத்த செலவுகள்

அது தொடர்புபட்ட குறிப்பிட்ட சொத்தில் பொதிந்துள்ள எதிர்கால பொருளாதார நன்மைகள் அதிகரிக்கும்போது மாத்திரமே அடுத்தடுத்த செலவுகள் மூலதனமாக்கப்படுகிறது. ஏனைய அனைத்து செலவுகளும் வருமானம் மற்றும் ஏனைய விரிவான வருமான கூற்றில் ஏற்பட்டதாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

(ஈ) ஒய்வும் அகற்றலும்

ஒரு தொட்டுணர முடியாத சொத்து அகற்றப்படும்போது அல்லது அதன் பயன்பாட்டிலிருந்து எதிர்காலத்தில் பொருளாதார அனுகூலங்கள் எதிர்பார்க்காது தொடர்ந்து அகற்றும்போது மீள இனங்காணப்படுகின்றது. தொட்டுணர முடியாத சொத்தின் ஒரு விடயம் அகறற்ப்படும்போதான இலாபங்கள் அல்லது இழப்புகள் அகற்றப்படும்போது கிடைக்கும் தொகையை (நேரடியாகக் காரணமான செலவுகள் ஏதாவதன் தேறிய) கொண்டு செல்லும் தொகையுடன் ஒப்பிட்டு தீர்மானிக்கப்படுவதுடன், வருமானம் மற்றும் ஏனைய விரிவான வருமான கூற்றில் ‘‘ஏனைய செயற்பாட்டு வருமானம்/(செலவுகள்)’’ என்பதற்குள் தேறிய அடிப்படையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.

3.5 பொருட்பதிவேடுகள்

சகல பொருட்பதிவேடுகளும் குறைவான ஆகுசெலவில் அல்லது தேறிய பெறக்கூடிய பெறுமதியில் மதிப்பிடப்பட்டுள்ளன. முதல் உள்வரல் முதல் வெளியேறல் (FIFO) அடிப்படையில் கிரயம் தீர்மானிக்கப்படுகிறது.

நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் (தொடர்ச்சி)

3.6 ஏனைய சொத்துக்கள்

ஏனைய கடன்படுனர், கிடைக்கவேண்டியவை, முற்பணங்கள், வைப்புக்கள், முற்செலுத்தப்பட்டவை என்பன ஏனைய சொத்துக்களில் அடங்கும்.

(அ) முற்பணங்கள், வைப்புக்கள், முற்செலுத்தப்பட்ட செலவினங்கள்

ஒரு நிதியாண்டை விடக் கூடுதலான காலத்திற்கு அனுகூலமானதாக அல்லது சம்பந்தப்பட்டதாகக் கருதப்படும் செலவினம் முற்பணங்கள், வைப்புகள், மற்றும் முற்செலுத்தப்பட்ட செலவினங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அத்தகைய செலவினம் கால விகிதாசார அடிப்படையில் அவை எவ்வளவு காலத்திற்கானதோ அதற்கேற்ப பதிவழிக்கப்படும்.

(ஆ) ஏனைய கடன்படுனர்

ஏனைய கடன்படுனர் கிரயத்தில் இழப்பீட்டு நட்டம் கழித்து, அடையாளம் காணப்படுவர்.

3.7 காசும், காசுக்கு சமமானவையும்

காசும், காசுக்கு சமமானவையும் கையிருப்புக் காசு மற்றும் குறுகிய கால, துரித கதியில் மாற்றக்கூடிய மூலதனங்களை உள்ளடக்கியதாகும். இவை வேண்டிய நேரத்தில் உடனடியாக வேண்டிய அளவு மாற்றக்கூடியவையும், பெறுமதியில் எந்த குறிப்பிடப்பட்ட தீங்கு எதனையும் விளைவிக்காதவையுமாகும். குறுகிய கால காசு தேவையைப் பூர்த்தி செய்வதற்காக இவை வைத்திருக்கப்படுகின்றன.

3.8 காசுப் பாய்ச்சல் கூற்று

காசுப் பாய்ச்சல் கூற்று சம்பந்தமாக இலங்கை கணக்கீட்டு தரம் இல.7 (LKAS) க்கு அமைய மறைமுகமான வழிமுறைகளைப் பயன்படுத்தி, காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது.

3.9 ஊழியர் அனுகூலங்கள்

(அ) வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள்

முறைப்படியான நியதிச் சட்டங்களுக்கும், பிரமாணங்களுக்கும் அமைய ஊழியர்கள் ஊழியர் சேமலாப நிதி (EPF) பங்களிப்பிற்கும், ஊழியர் நம்பிக்கை நிதி (ETF) பங்களிப்பிற்கும் தகுதியுடையவர்களாவார்கள். சபை, ஊழியர்களின் மொத்த வரும்படியின் நிலையான பங்களிப்புகளை ஊழியர் சேமலாப நிதிக்கும், ஊழியர் நம்பிக்கை நிதிக்கும் செலுத்துகிறது. மேலும் தொகையினைச் செலுத்தவேண்டுமென்று சட்டரீதியானதோ அல்லது ஆக்கபூர்வமான கடப்பாடோ எதுவும் இருக்காது.

(ஆ) வரையறுக்கப்பட்ட அனுகூல திட்டங்கள்

வரையறுக்கப்பட்ட அனுகூல திட்டங்கள் என்பவை வரையறுக்கப்பட்ட பங்களிப்பு திட்டங்கள் தவிர்ந்த தொழிலுக்குப் பிற்பாடான தொழிற்பாடுகளாகும். 1983 ஆம் ஆண்டின் பணிக்கொடை கொடுப்பனவு சட்ட இல.12 நியதியின்படி சபை பணிக்கொடை செலுத்தவேண்டும். இச் சட்டத்தின் கீழ் ஆயுட்கணக்கர் மதிப்பீட்டின் அடிப்படையில் கடப்பாட்டிற்கான ஏற்பாடு தீர்மானிக்கப்படுகிறது. "திட்டமிடப்பட்ட அலகுக் கடன் முறை" யைப் பயன்படுத்தி, ஒரு சுயாதீன ஆண்டுதோறும் ஆயுட்கணக்கரினால் கணக்கீடு நடாத்தப்படுகிறது.

3.10 பொறுப்புக்களும், ஏற்பாடுகளும்

